விலை சதம் 70

பக்கங்கள் — 10

அருந்துங்கள்!
அண்ணா கோப்பி
சுவை குன்றாமல்
உடனுக்குடன் அரைத்த
கோப்பியை
பெற்றுக்கொள்ள
நாடுங்கள்!
அண்ணா கோப்பிக்கடை
யாழ்ப்பாணம்.

# ஈழநாடு வார மலர்

THE EELANADU VARAMALAR

மாணவ மணிகளே!
உங்கள் சீருடைகளை திருப்தி
கரமாகவும், பிரகாசமாகவும்
சலவை செய்ய மில்க்வைற்
நீல சோப்பை வாங்கி
உபயோகியுங்கள்.
மேலுறைகளை அனுப்பி அப்பி
யாசக் கொப்பியையும் புதிய
காந்திக் கலண்டரையும்
மெட்ரிக் அளவை முறைகளு
டன் கூடிய நேரசூசியையும்
பெற்றுக்கொள்ளுங்கள்.
மில்க்வைற்- யாழ்ப்பாணம்

மலர் 22 மார்கழி 6 ஸபர் 12 ஞாயிற்றுக்கிழமை (21—12—80) இதழ் 312

## தியாகம்!

சிரிப்பது, சிந்திப்பது, கண்ணீர்சிந்தி அழுவது - இதுபோன்ற உணர்வுபூர்வமான காரியங்களை மனிதப் பிராணிகளால் மாத்திரமே செய்யக்கூடும் என்று சொல்வார்கள்.

அன்பு, ஆசை, இரக்கம், கருணை போன்ற பண்புகளும் மனிதர்க்குரியவையே!

இவைகளைவிட மனிதப் பிராணியால் செய்யக் கூடிய மிக உன்னதமான இன்னொரு காரியம் உண்டெனில் அது பிறருக்காகத் தியாகம் புரிவதாகும்.

பெற்ற பிள்ளைகளுக்காகத் தாயும் தந்தையும், பெற்றோருக்காகப் பிள்ளைகளு தியாகம் புரிகிறார்கள். இதில் சுயநலமே தலைதூக்கி நிற்கும். நண்பர்களுக்காகவும், நல்லோருக்காகவும், காதலுக்காகவும் தியாகம் புரிவோருமுளர். நாட்டுக்காக—நாட்டு மக்களுக்காகத் தியாகம் புரிந்து மங்காப் புகழினையடையும் வீரபுருஷர்களையும் காண்கின்றோம்.

ஆனால். தாய், தந்தை, உற்றார் — உறவினர் — ஊர்—சமூகம் — நாடு — நகரம் என்ற குறுகிய வட்டத்தில் நிற்காமல் உலகம் அனைத்தையும் ஒன்றாகவும் உலக மக்கள் அனைவரையும் ஒரே மக்களாகவும் கருதி அவர்களுக்காகத் தம்மையே அர்ப்பணித்துக் கொள்வதானது தியாகங்களுக்கெல்லாம் தலையாய தியாகம் எனலாம்.

இவ்வாறான மகோன்னத தியாகம் புரிபவர்கள் தெய்வப்பிறவிகளாவர்.

ஆயிரத்தில் ஒருவர்கூட இவ்வாறு தோன்றுவதில்லை. பல கோடிகளில் ஒருவரே இத்தன்மையுடைய மனிதராயிருக்கிறார். அவ்வாறான ஒருவர் சுமார் 1980 ஆண்டுகளுக்கு முன்னர் மண்ணில் பிறந்தார்.

உலக மக்கள் அனைவரையுமே அவர் நேசித்தார். அவர்களுக்காகவே தன் வாழ்வை, ஊனை, உதிரத்தை ஏன் உயிரையும் கூட அர்ப்பணித்தார். அந்தத் தியாகத்திற்கு இன்றுவரை ஈடு மில்லை இணையுமில்லை.

இன்னும் நான்கு தினங்களில் அப்பெருமகனின் பிறந்த நாளை உலகின் கிறிஸ்தவர்கள் அனைவரும் கொண்டாடவிருக்கிறார்கள். இந்தக் கொண்டாட்டங்களுக்கு மத்தியில் அன்று அவர் புரிந்த தியாகத்தின் நோக்கத்தினை ஒருகால் நினைவுகூரவேண்டியதுஉலகோர் அனைவருக்குமே உரிய ஒரு கடமையாகும்.

### அபிவிருத்தியைப் பாதிக்கும்

# சமூகவிரோத செயலுக்கு கடும் நடவடிக்கை!

## ஐ.தே.க.மாநாட்டில்எதிர்க்கட்சிகளுக்குஜே.ஆர்.எச்சரிக்கை

(கொழும்பு)

அபிவிருத்தியைப் பாதிக்கும்விதத்தில் சமூக விரோத நடவடிக்கைகளில் எதிர்க்கட்சிகள் ஈடுபட்டால் ஜனநாயக அடிப்படையில் சட்டதிட்டங்களுக்கு அமைவாகக் கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று திரு. ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தன நேற்று எச்சரிக்கை விடுத்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் 26-வது மகாநாட்டில் பேசுகையிலேயே ஜனாதிபதி இந்த எச்சரிக்கையை விடுத்தார். கொழும்பு சுகததாச உள்ளரங்கு விளையாட்டுத் திடலில் மகாநாடு இடம்பெற்றது.

### அரசின் லட்சியம்

"வேலைவாய்ப்புக்களை அதிகரிப்பது நாட்டுமக்களுக்கு சிறந்த வாழ்க்கை முறையை ஏற்படுத்துவது. நாட்டை அபிவிருத்தி செய்வது ஆகிய மூன்றுமே ஐக்கிய தேசியக் கட்சி அரசின் முக்கிய இலட்சியங்களாகும்" என்றும்ஜனாதிபதி கூறினார்.

மனதில் தோன்றுவதை வெளியில் அச்சமின்றி தெளியும் சுதந்திரம் நாட்டு மக்களுக்கு இன்று வழங்கப்பட்டுள்ளது. ஜனநாயக சம்பிரதாயங்களுக்கு அமைய இன்றைய அரசாங்கம் தனது கடமைகளைச் சிறப்பான முறையில் செய்து வருகிறது. இந்தியா, பர்மா, ஆப்கானிஸ்தான், இந்தோனேஷியா போன்ற நாடுகளில் பல்வேறு நெருக்கடிகள் இருக்கின்றன. இலங்கையில் மட்டுமே பூரண அமைதி நிலவுகின்றது என்றும் ஜனாதிபதி கூறினார்.

நாட்டின்அபிவிருத்தி முயற்சிகளுக்குப் பாதகமாகவும் பூசல்களைத் தூண்டிவிடக்கூடிய சமூக விரோத நடவடிக்கைகளிலும் எதிர்க்கட்சிகள் இறங்குவார்களானால் ஜனநாயக அடிப்படையிலும் சட்ட திட்டங்களுக்கமைவாகவும் கடும் நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்கம் பின்வாங்கமாட்டாது

(10ம் பக்கம் பார்க்க)

### வட்டுக்கோட்டை கொள்ளை

## சங்கரத்தையில் ஒரு சைக்கிள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை தபால் நிலைக் கொள்ளையர்களால பாவிக்கப்பட்டதாகக் கூறப்படும் சைக்கிள்களில ஒன்றை பொலிசார் மீட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் காலை யாழ். தபால் நிலையத்திலிருந்து வட்டுக்கோட்டைத் தபால் நிலையத்திற்குக் கார் ஒன்றில் எடுத்துச் செல்லப்பட்ட 80 ஆயிரம் ரூபாவை நான்கு துப்பாக்கி இளைஞர்கள் கொள்ளையடித்துச் சென்ற

(10ம் பக்கம் பார்க்க)

ஹோம் பினன்ஸ்
லிமிட்.
82, கன்னாதிட்டி றேட், யாழ்ப்பாணம்.
வருடாந்தம் ஆகக்கூடுதலான
25% வட்டியை
வழங்குகின்றது
ரூபா 1000/—க்கு மேற்பட்ட
எந்த முதலீட்டிற்கும்
மாதாந்தம் வட்டி வழங்கப்படும்
உங்கள் பணத்தை
விவேகமாக
முதலீடு செய்யுங்கள்
தலைமையகம்:
463, காலி வீதி, கொழும்பு-3.
தொலைபேசி : 89190

லீலா
இப்பொழுது
எங்கும்
விற்பனையாகின்றன!
பிரம்மஸ்ரீ இ. சி. இரகுநாதையர்
மரபு வாக்கிய கணிதப்படி கணிக்கப்பட்டு காலஞ்சென்ற 'சிந்தனைச் சிற்பச் செல்வர்' ச. த. சின்னத்துரை ச. நீ. அவர்களால் ஸ்தாபிக்கப்பட்டு ஒரே சித்திரக் கலண்டராகத் திகழும்
லீலா பஞ்சாங்க சித்திரக் கலண்டர்
(475 - க்கு மேற்பட்ட சித்திரங்களுடன்)
லீலா டயறி வகைகள்
புது அமைப்புடன் புதுப்பொலிவுடன்
இப்பொழுது விற்பனையாகின்றன.


சித்திரக் கலண்டரைப் பற்றி வண. பிதா தனிநாயகம் அடிகளின் மதிப்பீடு இதோ! லீலா பஞ்சாங்க நாட்காட்டியை போலவுமுள்ளதானதொரு உலகில் வேறு எந்த நாட்டிலும் நான் கண்டதில்லை இந்த நாட்காட்டியை நூல் நிலையம் எனக் கூறினாலும் மிகையாகாது.
ஆடர் முகவரி:
நியூ லீலா அச்சகம்
182, மெசஞ்ஜர் வீதி, கொழும்பு-12.
ஏகவிநியோகம்:
லீலா ஸ்டோர்ஸ்
249, ஓல்கொட் மாவத்தை, கொழும்பு - 12.
யாழ்ப்பாணக் குடா நாட்டில் மொத்தமாக கிடைக்குமிடம்
வேலவன்ஸ்
210, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
7698

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

பெண் ஒருவரின் தனிப் பாவிப்பில் உன்னத நிலையில் உள்ள Austin Cambridge A 60 கார் விற்பனைக்குண்டு 6 சிறீ 2000 தொடர் இலக்கம். தொடர்பு கொள்ளவும். 27, ஆசீர்வாதம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். 7607

வண்ணார்பண்ணை, பிரப்பங்குள வீதியில் கடைகள் சிறிய காணித்துண்டுடன் காலியான நிலையில் உடன் விற்பனைக்குண்டு 3/9, பிரப்பங்குள ஒழுங்கை, யாழ்ப்பாணம். 7667

யாழ். இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் சகல வசதியுடன் வீடு வளவு விற்பனைக்கு, பெண்களுக்கு மட்டும் சாப்பாட்டுடனும் தனித்தும் அறைகள் வாடகைக்கும் கொடுக்கப்படும். தொடர்பு கொள்ளவும். சி. கனகரெத்தினம், 465/1 கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். 7666

ஒரு லொறி கோழி உரம், கோழித்தீன் தட்டுகளும், நீர்த்தாங்கிகளும், புறாடரும், சினைப்படுத்தப்பட்ட சணல் ஆடு, 5 சிறீ தொடர் இத்தாலியன் 'லம்பிரேற்றா' ஸ்கூற்றர். 66, இந்துக்கல்லூரி ஒழுங்கை, வண்ணார்பண்ணை. 76[illegible]

உடுவில் மகளிர் கல்லூரிக்கு அருகாமையில் பிரதான வீதிக்கு அண்மையில் நல்ல சுற்றுடல் மத்தியில் அமைந்துள்ள சற்சதுரமான நான்கு பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. ஒரு பரப்பின் விலை பதினெட்டாயிரம் ரூபா வாகும். தொடர்பு விலாசம்; ஒலிம்பியா ஒட்டோ வேக்ஸ், ஸ்ரேசன் ரோட், சுன்னாகம். 7672

நல்ல நிலையிலுள்ள 22 சிறீ ஒஸ்ரின் டீசல் லொறி பிஞ்ஞன்சுடன் விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ளுமிடம்: T. கந்தசாமி, குப்பிளான், ஏழாலை. 7697

பாட்டுகள் பதிவு செய்யப்பட்ட நல்ல நிலையில் உள்ள Spool Tapes விற்பனைக்குண்டு. 66, இந்துக் கல்லூரி ஒழுங்கை, வண்ணார்பண்ணை. 7703

சீமை வெள்ளைப் பன்றி விற்பனைக்குண்டு. சுமார் 200 இறாத்தல். இ. கமலேந்திரம், சுதுமலை வடக்கு, மானிப்பாய். 7683

பெரிய வாதநாராயணி மரங்களும் (விறகுக்கு), அதன் கதியால்களும் (வேலிக்கு) கோழி எருவும் நம். 16, இரண்டாவது ஒழுங்கை, பிறவுண் வீதி, நீராவியடி 7707

## தேவை

க. பொ. த. உயர்தர வகுப்பிற் கற்பிக்க உயிரியல், கணித, பௌதிக, வர்த்தகமாணிப் பட்டதாரிகள் தேவை. விண்ணப்பிக்கவும். அதிபர், கார்மேல் பாத்திமாக் கல்லூரி கல்முனை. 7706

எமது சங்கத்தின் மூலம் காங்கேசன் சீமேந்துத் தொழிற்சாலையில் மரவேலை செய்வதற்கு ஆட்கள் தேவை திறமை அடிப்படையில் சம்பளம் வழங்கப்படும். உடன் தொடர்பு கொள்ளவும். சு. ஸ்ரீபாஸ்கரன், தலைவர், மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கம், மல்லாகம் 7696

மாலை 1 30 மணிமுதல் மாலை 6.30 மணிவரை பகுதிநேர காசாளராக ஒருவரும் உடைகளைப் பில்லுடன் சரிபார்த்துக் கொடுப்பதற்கு ஒருவரும் தேவை நற்சாட்சி பத்திரங்களுடன் 27-12-80 க்கு முன்னர் நேரிலோ கடிதமூலமோ தொடர்பு கொள்க. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். முகாமையாளர், சன்லைட் றைக்கிளீனேர்ஸ், யாழ்ப்பாணம். 7709

வயலின், வாய்ப்பாட்டு தகமை பெற்ற ஆசிரியை யாழ்ப்பாணத்திலுள்ள இசை மன்றத்திற்கு தேவை. உடனடியாக விண்ணப்பிக்கவும். விளம்பர இல 7652, C/o ஈழநாடு லிமிட்., யாழ்ப்பாணம். 7652

## தவறிவிட்டது

எனது அடையாள அட்டை ரவுணுக்குள் தொலைந்துவிட்டது. எடுத்தவர்கள் கீழே உள்ள முகவரியில் கொடுக்கவும். வெங்கடேஸ்வரன், வாலை அம்மன் கோவில், திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். 7694

## கொமிஷனுக்கு

நல்ல நிலைமையில் இயங்குப் பேக்கரி ஒன்று சகல தளபாடங்களுடன் கமிஷன் அடிப்படையில் கொடுக்கப்படும் அல்லது ¼ பரப்புக் காணி கட்டிடத்துடன் மேற்படி பேக்கரி விற்பனைக்கும் கொடுக்கலாம். விபரங்களுக்கு: உரிமையாளர், அரபாள் பேக்கரி, பிள்ளையார் கோவிலடி, அராலி. 7674

## WANTED

Colombo based Chemical Company requires dynamic person with minimum A/L Chemistry, to develop market for industrial chemicals. Ability to converse fluently in English and Sinhalese will be an advantage. Attractive terms offered. Apply Adv No. 7655, C/o Eelanadu Jaffna before 30th December. 7


## முக்கிய அறிவித்தல்
## SVP சீவம் ரெயிலறிங் மார்ட்

நவீன சந்தை மேல்மாடி 18-ம் இலக்கத்தில் இயங்கிவரும் SVP சீவம் ரெயிலறிங்மார்ட் நிறுவனத்தின் தற்போதைய பொறுப்பாளரான திரு. K P சின்னப்பன் (ரட்ணம்) என்பவர் 31-12-1980-ம் திகதியுடன் விலகிக்கொள்வதால், இவருடனுள்ள கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் தையல் வேலைகளை இத்திகதிக்கு முன்பாக முடித்துக்கொள்ளுமாறும் தவறின் அவற்றுக்கு நாம் பொறுப்பாளிகளாக இருக்க மாட்டோம் என்றும் இத்தால சகலருக்கும் அறிவித்துக்கொள்கின்றோம்.

**SVP சீவம்**
14A மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.


## யாழ்ப்பாண அக்கடமி

க. பொ. த. உயர்தர பரீட்சை (பழைய பாடத்திட்டம் ஏப்பிரல் 1981 மீட்டல் வகுப்புகள். வினாக்களும் அவற்றிற்குரிய விடைகளும் என்ற முறையில் நடத்தப்படும்.

விண்ணப்பங்கள் 26-12-80 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

இந்த வகுப்புகளில் சேர விரும்புவோர் உறுதிப்படுத்தப்பட்ட பரீட்சை பெறுபேறுகளுடன் அக்கடமி காரியாலயத்தில் உள்ள விண்ணப்பப்படிவங்களில் விண்ணப்பிக்கவும்.

வகுப்புகள் 31-12-80-ல் ஆரம்பமாகின்றன.

அதிபர்
தொலைபேசி எண் 617
3/6, பிரதான வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம். 7679

## விளம்பரம் வெற்றுச்சாக்கு விற்பனை

எமது சங்கத்தில் சுமார் 2500 வெற்றுச் சாக்குகள் கேள்விப் பத்திர மூலம் விற்பனையாகவுள்ளது. இவற்றிற்கான விண்ணப்பங்கள் யாவும் சங்கத்தில் ரூபா 2/- செலுத்திப் பெறப்பட்ட விண்ணப்பப் படிவங்களை முத்திரையிடப்பட்ட உறைகளில் வைத்து 26-12-80 வெள்ளிக்கிழமை பி. ப 3 00 மணிக்கு முன்பாக சங்கக் காரியாலயத்தில் சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''வெற்றுச் சாக்குக்கான கேள்விப் பத்திரம்'' எனக் குறிப்பிடவும்.

கேள்விப் பத்திர வைப்புப் பணம், 500/- ஆகும்.

இங்ஙனம்,
பொதுமுகாமையாளர்,
அளவெட்டி, மல்லாகம்,
ப. நோ. கூ. சங்கம் 7670

## திருவெம்பாவை விழா

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை மூத்தநயினார் திருக்கோயிலில் நடைபெற்று வரும் திருவெம்பாவை விழாவில் இன்று விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெறுவதுடன் பகல் 9 மணிக்கு வசந்த மண்டப பூசை ஆகி தேரில் வீதிவலம் வந்து சோமஸ்கந்தப் பெருமான் காட்சி கொடுத்து அருள்வார் நாளை திங்கட் கிழமை அதிகாலை 4 மணிக் நடேசப் பெருமானுக்கு அபிஷேகமாகி வெளிவீதி வலம் வருவார்.

## கலந்துரையாடல் இன்று

(யாழ்ப்பாணம்)

வடஇலங்கைப் பத்திரிகை எழுத்தாளர் மத்தியில் நிலவும் குறைபாடுகளைக் களைவதற்கும்; கஷ்டங்களைப் போக்குவதற்குமான செயல்பாடுகளை தோற்றுவிப்பதற்கான கலந்துரையாடல் ஒன்று இன்று மாலை யாழ்ப்பாணம் பொன்ட் படிப்பகத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கை கலை இலக்கிய நண்பர்கள் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இக் கலந்துரையாடலுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ் விரிவுரையாளரும், மேற்படி மன்றத்தின் தலைவருமான நா. சுப்பிரமணிய ஐயர் தலைமை தாங்குவார்

பிரதமவிருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் [illegible]

## சைவஆலய தர்மகர்த்தாசபை அங்குரார்ப்பணம்

(மாவிட்டபுரம்)

சைவ ஆலயங்களை எதிர்நோக்கும் பிரச்னைகளையிட்டு நடவடிக்கை எடுக்கும் முகமாக சைவ ஆலய தர்மகர்த்தாக்கள் சபை ஒன்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது. இது சம்பந்தமான கூட்டம் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் நடைபெற்றது.

''அகில இலங்கை சைவ ஆலய தர்மகர்த்தாக்கள் சபை'' என்னும் பெயரில் அமைக்கப்பட்டுள்ள இச்சபைக்கு மாவைஆலய ஆதீனகர்த்தா மகாராஜ ஸ்ரீ சு. து. ஷண்முகநாதக்குருக்கள் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். உபதலைவர்களாக சுன்னாகம் சிவன் தேவஸ்தான பிரதம குரு சிவஸ்ரீ எஸ். சோமாஸ்கந்தக் குருக்களும் கீரிமலை நகுலேஸ்வரதேவஸ்தான ஆதீனகர்த்தா சிவஸ்ரீ கு. நகுலேஸ்வரக்குருக்களும் தெரிவாகினர் இணைக்காரியதரிசிகளாக திரு. எஸ். விசுவநாதன் திரு. எஸ், ஆர். சண்முகரத்தினம் ஆகியோரும் 19 பேர் கொண்ட குழுவொன்றும் தெரிவாகியது. சைவாலயங்களை எதிர்நோக்கும் பிரச்னைகளையிட்டு இச்சபை உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று தெரிவிக்கப்படுகிறது.

## மன்னார்ப் பகுதியில் காலராவைக் கட்டுப்படுத்த தீவிர நடவடிக்கை

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தின் பல பகுதிகளிலும் காலரா நோய் பரவி வருகிறது. தடுப்பு நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பேசாலை அரசினர் வைத்தியசாலையில் வயிற்றோட்டம் காரணமாக அனுமதிக்கப்பட்டிருந்த இருவரும் சுகமடைந்து சென்றுள்ளனர். கர்சல் பகுதியைச் சேர்ந்த பலையாண்டி பூராசா காலரா நோயினால் இறந்ததையடுத்து இப்பகுதியிலிருந்து மேலும் ஒருவர் வயிற்றோட்டம், வாந்தி காரணமாக பேசாலை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதைத் தொடர்ந்து பேசாலை அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நோயாளிகள் அனைவரும் வீட்டிற்கு அனுப்பப்பட்டனர். இவ்வைத்தியசாலையில் ஒரே ஒரு ஆண்கள் வாட்டும் ஒரே ஒரு பெண்கள் வாட்டுமே உள்ளன. இதனால் இந்த வாட்டுகளில் சிகிச்சை பெற்று வந்த நோயாளிகள் வீட்டுக்கு அனுப்பப்பட்டனர். இந்த வாட்டுகள் இப்போது வயிற்றோட்டம் வாந்தி போன்ற நோயாளிகளை அனுமதிக்கவென ஒதுக்கப்பட்டுள்ளது.

தலைமன்னார் அரசினர் வைத்தியசாலையில் இருவர் வயிற்றோட்டம் காரணமாக அனுமதிக்கப்பட்டுள்ளனர் நகுலேஸ்வ ப் பகுதியில் எவருக்கும் வயிற்றோட்டம், வாந்தி போன்ற நோய்கள் இல்லையென அறிவிக்கப்பட்டுள்ளது.

## தகாத முறையில் நடந்தனராம்

(யாழ்ப்பாணம்)

பகிரங்க வீதியில் தகாத முறையில் நடந்துகொண்டதாக பொலிசாரால் கைது செய்யப்பட்ட இளம்ஜோடி கிளிநொச்சி நீதவான் திரு. ஜெ. சோதி முன்னிலையில் நேற்று முன்தினம் ஆஜர் செய்யப்பட்டனர்.

முல்லைத்தீவு - பரந்தன் வீதியில் தகாத முறையில் நடந்துகொண்டதாக சந்தேகத்தின் பேரில் பரந்தனைச் சேர்ந்த ஏ. தர்மராசா, கரவெட்டியைச் சேர்ந்த இளம்பெண் பரமேஸ்வரி ஆகியோர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

சந்தேகநபரான தர்மராசா சார்பில் சட்டத்தரணி ஜி ஜி. பொன்னம்பலம் ஜூனியர் சந்தேகநபரைப் பிணையில்விடுமாறு கோரினார். நீதவான் சந்தேகநபரான தர்மராசாவை 500ரூபா பிணையில்செல்ல அனுமதித்தார். சந்தேகநபரான பரமேஸ்வரியை இரட்சண்ய சேனைக்கு அனுப்ப உத்தரவிட்டு வழக்கை இம்மாதம் 26ம் திகதி பின்போட்டார். (க)

## சுன்னாகம் பட்டினசபை
## கேள்வி பத்திர அறிவித்தல்

சுன்னாகம் மீன் சந்தையில் 01-01-81 தொடக்கம் 31-12-81 வரையிலான காலப்பகுதியில் கீழ்க் காணும் குத்தகைகளுக்கான கேள்வி 1980-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 3-ம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 00 மணியளவில் விசேட ஆணையாளரால் ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விப் பத்திரம் கீழ் குறிப்பிடப்படும் விபரங்களின்படி பிணைப்பணமும் கேள்விப் பத்திரப் பணமும் செலுத்தி 29-12-80-ம் திகதி திங்கட்கிழமை பகல் 12-15 மணி வரையும் பெற்றுக்கொள்ளலாம் கேள்விப் பத்திரப் பணம் மீள விக்கப்படமாட்டாது மேலதிக விபரங்களை இவ்வலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

| கடை இல. | வியாபாரத்தின் தன்மை | பிணைப் பணம் | கேள்விப் பத்திரப் பணம் |
|---|---|---|---|
| மீ. 1 | மாட்டிறைச்சிக்கடை | 300-00 | 25-00 |

பொ. பாலசிங்கம்
விசேட ஆணையாளர்,
சுன்னாகம்.

பட்டினசபை அலுவலகம்,
சுன்னாகம். 19-12-80

77[illegible]

## யாழ். சதுரங்க (CHESS) கழக பகிரங்கப் போட்டி 1981.

விண்ணப்பங்கள் முடிவடையும் திகதி 31-12-80. விண்ணப்பங்களை பி. ப 4-00 — 6-00 மணி வரை காரி தரிசியிடம் 49 (161), பிறவுண் வீதி யாழ்ப்பாணத்தில் பெற்றுக்கொள்ளலாம். காசுப் பரிசுகள் ரூபா 175 வழங்கப்படும். 763

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒரு கண்ணீர்ப்பூ!

மண்டைதீவு கலைச்செல்வி

நிசா இன்னமும் உறங்கவில்லை. மணி பதினொன்றைத் தாண்டிக்கொண்டிருந்து. சற்று முன் அந்தக் கன்னியர் மடத்தை வியாபித்திருந்த கலகலப்பும், ஆர்ப்பாட்டங்களும் ஓய்ந்துவிட்டன. உலகை இருள் ஆக்கிரமித்திருப்பது போல் அவள் மனதிலும் துன்ப இருள் மண்டிக் கிடந்தது. மறக்கத் துடிக்கும் நினைவுகள் நெஞ்சை மீண்டும் மீண்டும் தொடுகையில்....! கனவாய்..... கானலாய்..... சருகாய்..... சாம்பலாய்..... போன அதே நினைவுகள்! ம்...! நீண்ட பெருமூச்சுக்கள்! அதை ஆராதிக்கும் கண்ணீர்த்திவலைகள்.....! இவைதான் அவளுக்குச் சொந்தமாகிவிட்டனவே! நினைத்தாளா தனக்கு இப்படி வருமென்று! ''ஓ.... ஆண்டவா.....'' வேதனையில் தோய்த்தெடுத்த சிறிய விம்மல்! நான் வாழ்க்கை வீதியில் இறுதி மட்டும் வெறும் நடைப்பிணமா? அன்பிற்காய் ஏங்கிய என்னை ஏமாற்றிவிட்டாயே! நான் ஒரு பாவியா....? எனக்கு ஏன் இத்தனை சோதனைகள்...; வேதனைகள்....! ஓ..... நீ பதில் சொல்லமாட்டாய்.

விரக்தியின் விளிம்பில் மனம் எப்படியெல்லாமோ அலைகிறது என்னால் எப்படி மதனோடு அப்படிப் பேசமுடிந்தது....? நினைக்கவே அவளுக்கு வியப்பாய் இருந்தது. அவனோடு கழித்த அந்த இனிமையான லயிப்பான நாட்களை மறந்து ஒருகணத்தில் அவரைத் தூக்கி எறிய எப்படி என்னால் முடிந்தது....? ம்....! எல்லாம் நடந்து முடிந்த நிகழ்ச்சிகள் என எண்ணி அதை மீண்டும் மீண்டும் நினைத்துப் பார்ப்பதில் எதுவித பிரயோசனமும் இல்லையென்றாலும் குரங்கு மனம் தாவுகிறது. அவளும் ஒரு மனிதஜீவன் தானே? அவளுக்கும் ஆசாபாசங்கள்!— கனவுகள்—கற்பனைகள் இல்லாமலா! எல்லாம் எதிர்பார்ப்பில் நின்று ஏமாற்றக் குழியில் தகனித்தபோது அவளை வாழவைக்கவென்றே மிஞ்சியவை அந்த இனிமையான நினைவுகள்தான். நினைத்துப் பார்ப்பதில்கூட அவளுக்கு ஒரு இன்பமும் துன்பமும் கலந்த வேதனை. கண்ணீர் விடுவதில்கூட ஒரு ஆத்ம திருப்தி. விசித்திரமான பெண்தான். பிறப்புங்கூட அப்படித்தான்....!

அதோ கம்பீரமாக நிமிர்ந்து நிற்கும் அந்தக் கன்னியர் மடமும் அதோடு தொடுத்திருக்கும் அநாதைச் சிறுவர் மடமும் தான் அவள் தாயும் தந்தையும்! அறிவு தெரிந்த நாட்தொடக்கம் ஆயிரக்கணக்கான தாய்மடி காணாத் தளிர்க் குழந்தைகளின் கொச்சி மழலையும், சிஸ்டர்மாருடைய களங்கமற்ற தெய்வீக முகங்களும்தான் அவள் சொந்தமென அறிந்தபோது..... புரிந்தபோது ஏதோவொரு ஏக்க உணர்வு அவள் நெஞ்சை அழுத்தும்போது..... தவித்துப் போவாள். 'நான் ஒரு அநாதையா....?'' என்ற சொல் நெஞ்சத்தினூடே ஒலித்து மனதை நொறுக்குகையில்..... நிசா..... சோர்ந்துவிடுவாள், ஆண்டவன் மேல் தீராத வெறுப்பு! எதிலுமே ஒரு பிடிப்பற்ற நிலை. சதா யோசனை..... அதனால் ஏற்படும் தலையிடி..... மயக்கம்! அவளுக்குள்ளேயே விஷரூபமெடுக்கும் அந்தத் தாழ்வு உணர்ச்சி கண்களில் படர்கையில்.... ''மகளே! ஆண்டவருடைய படைப்பிலே யாரும் அநாதைகள் அல்ல....! தனியேதான் பிறக்கிறோம்; தனியேதான் போகப்போகிறோம். அதற்கிடையில் எத்தனையோ பாசப் பிணைப்புக்கள். கவலைப்படாதே! நாம் எல்லாம் அநாதைகள் அல்ல

ஆம்! நாம் ஆண்டவருடைய பிள்ளைகளம்மா—!'' புண்ணான நெஞ்சத்திற்கு ஒத்தடம் கொடுத்தாற்போல் சிஸ்டரின் ஆறுதல்மொழிகள் தரும் சின்னச்சுகங்கள். இருந்தாலும் புண் மாறினாலும் வடு மாறுமா? என்பதுபோல் அடிமனதில் இருந்து எழும் ஏக்கம் நிசாவை விட்டு மறைய மறுத்தது. கொன்வென்றில் படிக்கும் போதுகூட நிசாவிற்கு எதிலுமே ஒரு பிடிப்பற்ற நிலை. சக மாணவிகளைப் பார்க்கும் போது அவர்கள் மேல் நிசாவிற்குத் தீராத வெறுப்பும், பொறாமையும்தான் ஏற்படும். விளையாட்டுக்கள் அவளைக் கவரவில்லை. விநோதங்கள் பிடிக்கவில்லை. ஏதோ ஒன்றை இழந்துவிட்டாள் போன்ற பிரமை. எப்பொழுதும் ஒரு தவிப்பு. தாழ்வான அருவருப்பான உணர்வு. தனிமையில் ஒரு பிடிப்பு. அமைதியில் ஒருவித லயிப்பு. எதற்காகவோ ஏங்கி அழும் உள்ளம். கோடையின் தவிப்பு மாறி வசந்தத்தின் ஜனிப்பின் பருவம் அவளைத் தாலாட்டியது. துணிவோடு உலகக் களத்திலே இறங்கி ஏதோ ஒன்றைத் தேடத் தொடங்கினாள். முன்னைய நிலைகள் முற்றாக விடைபெறவே நிசா புதுவுரு எடுத்தாள். காலங்கள் யாருக்காகவும் காத்திருக்காமல் நகர்கையில்..... அவளில் இருந்த சோகச்சுவடுகள் மாறி வாழ்வில் தனக்குமொரு சுபீட்சத்தை ஏன் சுதந்திரத்தையே எதிர்பார்த்தாள். கல்வி கற்று முடிந்ததும் ஆசிரியர் நியமனம் கிடைத்தது. புது உறவுகள். புதுச் சூழல். புதிய அனுபவங்கள். சதா ஒரு சூழலில் வாழ்ந்துவிட்ட அவளிற்கு அக் குக்கிராமம் புதிய பல உறவுகளை ஏற்படுத்திக் கொடுத்தது. அதற்குள் மதனின் நட்பு. அவனுக்கே சொந்தமான சீர்திருத்தக் கருத்துக்கள், புதுமையை விரும்பும் மனோபாவம் அத்தனையும் எழுத்தில் வடித்து சமூகத்தை ஊடுருவக்கூடிய கொள்கைகளை உலகில் பரப்ப ஒரு படைப்பாளியான அவன் எடுக்கும் முயற்சிகள்.....! எல்லாமே நிசாவை அவன் ஒரு சக ஆசிரியன் என்ற நிலைமை மாறி மதனை தான் எங்கோ ஒரு உயரத்தில் வைத்துப்பார்க்கும் அவள் மகிழ்வும் தொடர! மதனும் நிசாவும் காதலர்கள் ஆகினார்கள்.

இனிய சந்திப்புக்கள்..... பார்வைப் பரிமாற்றங்கள்.....! எல்லாம் அவள் கற்பனையில் ஜாலம் காட்ட..... தொடரும் ஏக்கப் பெருமூச்சுக்கள். நாட்கள் நகர அந்தத் தலை சிறந்த முற்போக்குக் கவிஞனின் படைப்புகளுக்கெல்லம் தான தான் கதாநாயகியென அவன் வாயாலேயே அவள் கேட்ட போது மகிழ்வில் அவள் பட்ட பாடு'' மதன்....! இல்லை..... நான் அநாதையே இல்லை. நான்..... அநாதையே..... இல்லை.....!'' உணர்ச்சி வசப்பட்டு அவள் கரங்களைத் தன்னோடு இணைத்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்தாள்.

மதன் வீட்டுச் செல்லப் பிள்ளை. அவன் மேடைப்பேச்சிற்கு சபாஷ் போடும் தந்தை. முற்போக்கு, சமத்துவம், சீதன ஒழிப்பு, தீண்டாமை பற்றியெல்லாம் அவன் கூவகையில் அவளை நினைத்துப் பெருமையுற்ற அவன் தந்தை-மதன் தன் கொள்கைகளை செயல் மூலம் நிலை நாட்டத் துணிந்த போது..... கொதித்தெழுந்தார். ''எங்கட குலமென்ன? கோத்திரமென்ன? அந்தஸ்து என்ன...! இத்தனைக்கும் முன்னை - அந்த அப்பன் பேர் தெரியாத சனத்தையே என்ர மருமகளா வாறது....?'' என்றார்.

''தம்பி எல்லாரும் எழுதுற போலவும் பேசுற போல நடக்கினம். நம்மட சாதிக்கு தன்னிலும் அவள் கிட்ட வர முடியுமே. மெல்லமா அவளை மறந்திட்டு.....'' அவன் அம்மா சொல்லி முடிப்பதற்குள் ''அம்மா, நிசாவை ஏமாத்த

(9ம் பக்கம் பார்க்க)

# ஓகோ! அதுவா சங்கதி?!

'கொண்டோடி' துரைசிங்கத்தாரை உங்களுக்குத் தெரியுமே? அவரைக் கண்டால் எல்லோருக்கும் நடுக்கம்தான். ஒவ்வொருவருடனும் மிக நெருக்கமாகப் பழகி அவர்களிடமிருந்து பல இரகசியத் தகவல்களை அறிந்து பின்னர் அவற்றை கொண்டோடிப் போய் இன்னொரு இடத்தில் 'கை, கால் வைத்து' மிகவும் சுவையாகக் கொட்டிவிடுவது அவர் வழக்கம். ஊர்ப்புதினங்களையும், 'குசுகுசு' கதைகளையும் எப்படியாவது 'மணந்து' பிடித்துவிடுவார். யாரையாவது கண்டவுடன் ''கேட்டியளே சங்கதி?'' என்று ஆரம்பித்து காதிற்குள் இரகசியமாக - வெகு விஸ்தாரமாகச் செய்திகள் வாசிப்பார்.

அன்றைக்கு ஒருநாள் துரைசிங்கம் சினிமாப் பார்க்கப் போயிருந்தார். படம் ஆரம்பித்தபின் அவசரம் அவசரமாக தியேட்டருக்குள் நுழைந்து துரைசிங்கத்திற்கு அருகில் அமர்ந்தான் தவம். வந்த அவசரத்தில் அவன் துரைசிங்கத்தைக் கவனிக்கவில்லை. ஆனால் அவர் இவனைக் கண்டுவிட்டார். இடைவேளை வரட்டும் என்று காத்திருந்தார் கொண்டோடி துரைசிங்கம். சில நாட்களுக்கு முன் தான் கண்ட காட்சியை இன்னும் யாருக்கும் சொல்லாமல் தலை வெடித்துக்கொண்டிருக்கிறது அதை இன்று எப்படியாவது தவத்திடம் அவிழ்த்துவிட வேண்டும் என்று இடைவேளையைக் காத்திருந்தார் அவர்.

அப்பாடா! அந்த இடைவேளையும் வந்தது. 'கொண்டோடி' மெதுவாகத் தவத்தைச் சுரண்டினார். அப்போது தான் அவரைத் திரும்பிப் பார்த்த தவம் அசட்டுச் சிரிப்பை நெளியவிட்டான். அவரிடமிருந்து நழுவவேண்டுமென்ற எண்ணத்தில் கண்களை அங்குமிங்கும் அலையவிட்டான்.

இதற்கிடையில் துரைசிங்கம் அவன் காதுக்குள் வாயை நுழைத்து 'கேட்டியளே சங்கதி?'' என்று ஆரம்பித்தார். காலில் தெறித்த எச்சிலை மெல்லத் துடைத்துக்கொண்டு தவம் பரிதாபமாக அவர் சொல்வதைக் கேட்க ஆயத்தமானான்,

''தம்பி போன கிழமை நீங்கள் பக்கத்து ஊரிலை 'சந்திரா' எண்ட பிள்ளையைப் பொம்பிளை பாத்திட்டு வந்தனிங்களல்லே'' என்று கேட்டு நிறுத்தினார் அவர்.

தவத்திற்கு அப்போது கல்யாணப் பேச்சுக்கள் நடந்து கொண்டிருந்தன. சென்ற வாரம் 'சந்திரா'வைப் பெண் பார்த்து சம்மதமும் கொடுத்து விட்டிருந்தான். இப்போது இவரது கதையில் என்ன புயல் கிளம்பப்போகிறதோ என்ற பயத்துடன் அவன் இருந்தான். அவர் தொடர்ந்தார்.

''அவளை எனக்கு முந்தியே தெரியும். நான் அடிக்கடி கண்டிருக்கிறன்; குடும்பம் பிழையில்லை. ஆனால், கொஞ்சம் யோசிச்சுச் செய்யவேணும்....''

''ஏன்? என்ன விஷயம்?'' என்று பதறினான் தவம்.

''இல்லைத் தம்பி.... முந்த நாள் அவளும், இன்னொரு பொடியனுமாய்ப் படம் பாக்க வந்ததைக் கண்டனான் அவளைப் பாத்தால் அவ்வளவு நல்லாயில்லை. தலை வளர்ப்பும், கிருதாவுமாய் கூலிங்கிளாசும் போட்டுக் கொண்டு.... ஒரு காவாலி மாதிரி கிடந்துது.''

அவரது கதையைக் கேட்டுத் தவம் குழம்பினான். ஆனால், துரைசிங்கம் வசனத்தை முடிக்கவில்லை. பின்னாலிருந்து துரைசிங்கத்தின் பிடரியில் 'படார்' என்று ஓர் அறை விழுந்தது. ''ஐயோ'' என்று அலறியபடி திரும்பினார் அவர். தவமும் திகைப்புடன் திரும்பினான். அங்கே—

துரைசிங்கம் வர்ணித்த அந்தக் காவாலி நின்றுகொண்டிருந்தான் துரைசிங்கம் உடனே, ''தம்பி, தம்பி, இது தான் அந்தப் பொடியன். பாத்தியே நான் சொன்னன். தன்னிலை குற்றமிருந்தாலை தானே இப்பிடிக் கோபம் வருகுது'' என்று தனது கட்சிக்கு நியாயம் தேடினார். இப்போது திடீரென்று தவமும் கோபத்துடன் துரைசிங்கத்தின் மேல் பாய்ந்தான். 'இதென்னடா வம்பாய்ப் போச்சு' என்று நினைத்த துரைசிங்கம் அலறினார். சனங்கள் எல்லாம் கூடிவிட்டனர்.

''டேய் கொண்டோடி! இதார் தெரியுமே? என்ரை வருங்கால மனைவி சந்திராவின் அண்ணன்; என்ரை மச்சான். விளங்குதே?'' என்று தவம் கூறியதும் அசடுவழியத் தலை குனிந்தபடி மிகுதிப் படமும் வேண்டாமென்று அவ்வளவோடு வெளியே நழுவினான் கொண்டோடி துரைசிங்கம்.

இப்போதெல்லாம் யாரிடமாவது அவர் ''கேட்டியளே சங்கதி?.....', என்று ஆரம்பித்தால் அவர்கள், ''ஓ! அந்தத் தியேட்டர்ச் சங்கதியோ?'' என்று திருப்பிக் கேட்டு அவர் வாயை அடைத்துவிடுகிறார்கள்.

(கற்பனை)

— கோப்பாய் எஸ். சிவம் —

எண்களின் மூலம்

# பிறந்த நாளைக் (கிழமை) கண்டு பிடிக்கும் இலகு வழி!

ஈழநாடு 30-11-1980 - ம் திகதி வாரமலரில் வேலணை சோதிடர் ஆ. சிவராசா எண்கள் மூலம் உங்கள் பிறந்த கிழமையை எப்படிக் கண்டு பிடிப்பது என்ற தலைப்பில் விபரம் எழுதியிருந்தார். விடை சரியாக இருப்பினும் செய்யும் வழிமுறைக்கு வருட அட்டவணை, மாத அட்டவணை, கிழமைகளுக்கான அட்டவணை, சூட்சும எண் என பல எண்களும் தேவைப்படுகின்றன. இவை அனைத்தையும் மனப்பாடம் செய்து கொள்வதும் சிரமமானதாலும், இதை விட சுலபமான வழியொன்றை இங்கே தருகின்றேன்.

மாதங்களுக்குரிய ஒரு சிறிய அட்டவணையை மட்டும் மனப்பாடம் செய்து கொண்டு, முதலில் 4ஆலும் பின்பு 7ஆலும் பிரிக்கவேண்டும் என்பதையும் மனதில் வைத்துக்கொண்டால் எப்போதும் யாருக்கும் அவர் பிறந்த கிழமையைக் கண்டு பிடித்துக் காட்டி, எண் கலையில் நம்பிக்கையற்றவர்களையும் நம்பிக்கைகொள்ளச் செய்யலாம்.

சோதிடர் சிவராசா தனது முறைப்படி 99 வயது வரைக்குமே கிழமை காணலாம் எனக் கூறியுள்ளார், இந்த சுலபமான எண் கணிப்பின்படி எத்தனை ஆண்டுகளுக்கு முன் பிறந்தோரின் பிறந்த கிழமையையும் கண்டுபிடிக்கலாம். லீப் வருடத்தில் பிறந்திருப்பினும் பிறந்த கிழமையைக் கண்டுபிடித்துவிடலாம். வரு காலத்தில் ஒரு காலத்தைக் குறித்து அதில் பிறப்பவர் என்ன கிழமையில் பிறப்பார்? என்பதையும் கண்டு பிடித்துவிடலாம்.

## தேவையான மாத அட்டவணை

| | |
|---|---|
| ஏப்ரல், யூலை | — 0 |
| ஜனவரி, ஒக்டோபர் | — 1 |
| மே | — 2 |
| ஓகஸ்ட் | — 3 |
| மார்ச், நவம்பர், பெப்ரவரி | — 4 |
| யூன் | — 5 |
| செப்டம்பர். டிசம்பர் | — 6 |

(லீப் வருடமாயின் ஜனவரி - 0 பிப்ரவரி - 3) எனக் கொள்ளவும்

செய்முறை ஒருவரது பிறந்த காலம் 21 - 1 - 1938 எனக் கொள்வோம்.

முதலில் வருடத்தின் ஒன்று, பத்து ஸ்தான எண்களான 38ஐ 4ஆல் பிரிக்கவும்.

38 — 9ம் மீதி 2.
—
4

(மீதியை விட்டுவிடவும்.

பின்பு பிறந்த திகதி + மாதம் (அட்டவணைப்படியான எண்ணில்) + பிரிக்கப்பட்ட வருடம் + பிரித்து வந்த தொகையைக் கூட்டவும்.

21 + 1 + 38 + 9 — 69.

பின்பு 69ஐ 7ஆல் பிரிக்கவும்.

69 — 9 மீதி 6.
—
7

மீதியாக வரும் 6ம் கிழமையே இவரது பிறந்தகிழமையாகும், ஞாயிற்றுக்கிழமையை முதல் கிழமையாகக்கொண்டு கணக்கிடவும்.

6ம் கிழமை வெள்ளிக் கிழமையாகும்.

திருமதி எம். நாகராசா

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உங்கள் குழந்தைகள் ஏன் அழுகின்றன?

'குழலினிது யாழினிது
என்ப தம் மக்கள்
மழலைச்சொற் கேளாதவர்'

என்றுதான் வள்ளுவன் சொன்னான். ஆனால் அந்த மழலையே அழுகையாக மாறும் போது அது பெருந் தலையிடியாய் அமைந்துவிடுவதும் உண்டு. அந்த அழுகையின் காரணத்தைப் புரிந்துகொள்ளப் பெற்றோர்களால் முடியவில்லை எனில் அதைவிட வேதனை வேறு இருக்க முடியாது. தன் மழலை மொழியினாவது தனது அழுகைக்கான காரணத்தைச் சொல்லக்கூடிய வயதுடைய குழந்தை எனில் ஏதாவது தந்திரம் செய்தாவது அதனைச் சொல்லவைத்து அறியலாம் ஆனால் எதுவுமே சொல்லமுடியாத வயதுடைய குழந்தையாயின் ...... ......

## பிறந்த உடனே

குழந்தை ஒன்று பிறந்தவுடன் நிகழுகின்ற முதலாவது அழுகை அதன் உயிர்வாழ்வுக்கு மிக அத்தியாவசியமானதாய் அமைந்துவிடுகிறது. இதுவரைகாலமும் தாயிடமிருந்து கிடைத்துவரும் ஒட்சிசன் கொடுப்பனவு நிறுத்தப்பட்டவுடனே வெளிவளியிலிருந்து ஒட்சிசனைப் பெறும் பொருட்டு நுரையீரல் விரிந்துகொடுப்பதற்கும் மூளையானது உடனடியாகத் தனக்குத் தேவையான ஒட்சிசனைப் பெறுவதற்கும் இந்த அழுகைதான் உதவுகிறது. தொடர்ந்து சிலவாரங்களுக்குக் குழந்தையிடம் இந்த 'அழுகை' மிகச் சாதாரணமாகக் காணப்படும். ஒரு நாளின் இருபத்துநாலு மணித்தியாலங்களில் எவ்வளவுநேரம் இந்த 'அழுகை' காணப்படும் என்பது குழந்தைக்குக் குழந்தை வேறுபடுமாயினும் சாதாரணமாக இது இரண்டு மணி நேரம்வரை காணப்படலாம்.

பிறந்த முதல் சிலவாரங்களில் தனது சூழலில் ஏற்படுகின்ற எல்லாத் தூண்டல்களுக்கும் குழந்தை காட்டுகின்ற தூண்டற்பேறு இந்த 'அழுகை' பட்டுமே. அத்துடன் தனது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு அது பயன்படுத்தக்கூடிய ஒரே ஒரு ஆயுதமும் இந்த அழுகைதான். ஆகவே இந்தச்சமயத்தில் அது அழுகின்ற ஒவ்வொரு முறையும் அந்த அழுகைக்குக் காரணம் கற்பிக்கமுடியாது. இன்னொரு வகையில் சொன்னால் அது "சும்மா" அழுவதும் உண்டு.

## கை கால் அடித்தல்

முதற் நிலையில் டடும்படி தடடையான மேற்பரப்பில் குழந்தை படுக்கவைக்கப்படும் பொழுது அதன் கால்களும் கைகளும் ஒரு குறிப்பிட்ட கோலத்தில் அடிக்கடி படுகின்றன. இந்த 'அடித்தல்' அதனை ஒருபக்கம் சரிக்க எத்தனிக்கும்போது குழந்தை அழும். ஆனால் உங்கள் கைகளை அதன் நெஞ்சில்மேல் வைத்து அது புரளப்பார்க்கும் தன்மையை நிறுத்தினால் அதன் அழுகையும் நிற்கும். இதனால் தான் துணியில் இறுக்கமாகச் சுற்றிப் போடும்போது அல்லது தாயின் மடியில் இறுக்கமாக அணைக்கப்படும்போது குழந்தை அமைதியாக இருக்கிறது.

## பசி

பசி குழந்தையின் அழுகைக்கு ஒரு முக்கியமான எல்லாருக்கும் தெரிந்த காரணியாக இருக்கிறது. குழந்தை அரைப் பட்டினி இருக்காமல் தனக்குத் தேவையான உணவைப் பெற்றுக்கொள்ள இந்த அழுகை உதவுகிறது; ஆனாலும் குழந்தை அழும் நேரமெல்லாம் அதற்குப் 'பசி' என்று தவறாக அர்த்தம் செய்துகொண்டு அதன் தேவைக்கு மேலதிகமான உணவை அதன் வாயில் திணிக்கக்கூடாது. இவ்வாறு செல்வதனால் குழந்தை வயதுக்கு மீறிய நிறை உடையதாக வளர்வது மட்டுமன்றி அதனுடைய தேவைகளைச் சரியாகப் புரிந்துகொள்ள முடியாத நிலையும் வளரும்.

## கழிவகற்றல்

சிறுநீர் அல்லது மலங்கழித்தலால் குழந்தையின் 'நரம்பின்' தூண்டு அழுச்சுடைகிறது. ஈரமாகிப்போன அல்லது மலத்தினால் மாசடைந்த துண்டு குழந்தை அழுவதற்கான காரணமாகப் பெரும்பாலும் கருதப்படுகிறது. ஆனால் உண்மையில் இதற்காகக் குழந்தை அழுவது மிகவும் குறைவாகும். சிறுநீர் கழித்துவிட்டு, மிக மகிழ்வுடனே அந்த நீரில் காலடித்து விளையாடும் குழந்தையையே அதிகமாய்ச் சந்திக்கலாம். "குளிர்" குழந்தையை அழவைக்கும் என்பது உண்மைதான் ஆனால் சிறுநீர் போன்ற கழிவுகள் குளிராக இருப்பதற்குப் பதிலாகச் சூடாகவே இருக்கின்றன. எமக்கு விருப்பமான உணவுகளையே சடவுளும் விரும்புவார் என நினைத்து அவற்றை அவருக்குப் படைப்பதாக 'நேர்த்தி' வைப்பதுபோல எமது விருப்பு வெறுப்புக்களைக் குழந்தையின் நடத்தையுடன் நாம் பொருத்த முயல்வதற்கு இது சிறந்ததோர் உதாரணமாகும்.

## கோகிலா — மகேந்திரன்

## அலுப்பு

நீண்டநேரம் ஒரே இடத்தில் ஒரேமாதிரிப் படுத்திருப்பதனால் ஏற்படும் அலுப்பினாலும், 'பொழுது போகாமல்' இருப்பதாலும்கூடக் குழந்தை அழக்கூடும். வளர்ந்தவர்களைப் போலவே குழந்தைகளும் 'மாறுதல்'களை விரும்புகின்றன. அப்போது குழந்தையை உற்சாகமூட்டி விளையாடச் செய்து அதன் அழுகையை நிறுத்த முடியும்.

## தாய்ப்பாலும் தாயின் உணர்வுகளும்

தாய்ப்பால் குடித்த உடனே ஒரு குழந்தை அழுமாயின் தாய்ப்பால் குழந்தைக்குப் பிடிக்கவில்லை என்றோ அல்லது ஒத்துக்கொள்ளவில்லை என்றோ தப்பர்த்தம் செய்துகொண்டு குழந்தையின் தாய்ப்பால் குடிக்கும் பழக்கத்தை மறக்கடிக்க எத்தனிக்கக்கூடாது. எந்தக் குழந்தைக்கும் தாய்ப்பால் பிடிக்காமல் இருப்பதுமில்லை. ஒத்துக்கொள்ளாமல் போவதுமில்லை. ஆனால் ஒருவேளை தாய்ப்பால் போதாதிருந்தால் அதற்காகக் குழந்தை அழக்கூடும் அவ்வாறான சந்தர்ப்பங்களில் பொருத்தமானதொரு சட்டிப்பால் பாலைக் குழந்தைக்கு வழங்கலாம்.

தாயின் உணர்ச்சிகளையும் மன எழுச்சிகளையும் மிகச் சிறிய குழந்தைகூட எப்படியோ புரிந்துகொண்டுவிடுகிறது. ஆகவே தாயின் குழப்பநிலை குழந்தையை அழச் செய்கிறது. குழந்தையின் நலனுக்காகவாயினும் பெரும் மன எழுச்சிகளுக்கு ஆட்படாமல் மகிழ்வுடன் இருக்கவேண்டியது ஒவ்வொரு அன்னையரதும் கடமையாகும்.

## வலிகளும் நோவுகளும்

ஊசி போடுதல் போன்ற நேரங்களில் குழந்தை உணர்கின்ற நோவுகள், குறுகிய நேரக் கடுமையான அழுகையைக் குழந்தையிடம் ஏற்படுத்துமாயினும் உடனடியாக அவை மறக்கப்பட்டு விடும். குழந்தையின் வயது ஆறு மாதத்தைக் கடந்த பின்னரே அதுபோன்ற நிகழ்வுகள் நினைவில் நின்று ஊசியைக் கண்டவுடன் மீண்டும் குழந்தையிடம் நீண்ட நேர அழுகையை ஏற்படுத்தும்.

பல்லு முளைக்கும் போது நோ "ஏற்படுகிறதென்றும் அதனால் குழந்தை அழுவதுண்டென்றும் சிலர் கருதுகிறார்கள். இந்த நம்பிக்கையில் எதுவித உண்மையுமில்லை. பல்லு முளைக்கும் போதெல்லாம் அழவேண்டுமெனில் குழந்தை ஆறுமாதம் முதல் இருபது வயதுவரை அல்லவா அழுதுகொண்டிருக்கவேண்டும்

## உள்ளத்து வலிகள்

வலி என்பது உடலிலும் ஏற்படலாம். உள்ளத்திலும் ஏற்படலாம். அது உடல் சம்பந்தப்பட்டதாயின் குழந்தைக்கும் பெற்றோருக்கும் அதை விளங்கிக் கொள்வது சுலபமாயிருக்கும் ஆனால் உள்ளத்து வலிகள் பெரிய பிரச்சினைகளைத் தோற்றுவிக்கக் கூடும். மன எழுச்சிகளினால் ஏற்படும் வலிகள் பல சமயங்களில் உடல் வலியை விடக் கடுமையானதாக இருக்கலாம். ஆகவே 'கடுமை'யைக் கொண்டு அதனை இனம் காணமுடியாது. அற்குறிகளை வைத்தே அதனைக் கண்டுகொள்ளலாம்.

குழந்தைகளிடம் ஏற்படுகின்ற மன எழுச்சி வலிகள், வயிறு, தலை ஆகிய மூன்று இடங்களில் தான் பெரும்பாலும் ஏற்படுகிறது.

கால்களில் ஏற்படக்கூடிய இவ்வகை வலி பெரும்பாலும் தொடை, முழங்காலின் கீழ்ப் பகுதி ஆகிய இடங்களில் தான் ஏற்படுகிறது. "றுமாற்றுக" வலிபோலவே இது தென்படினும் அதற்கும் இதற்கும் எவ்வித தொடர்பும் இருக்காது. "றுமாற்றிக்" வலி சால் பொருத்துக்களில் ஏற்படுவதுடன், காலை அசைக்கும்போது அதிகமாய்த் தெரியும் ஆனால் இதுவோ தசைகளிலேயே ஏற்படுகிறது. இரண்டு மூன்று வயதுக்குட்பட்ட குழந்தைகளிடமே அதிகமாய் ஏற்படும் இவ்வலி சில வேளைகளில் அவர்களை நித்திரையிலிருந்து விழிக்கச் செய்து அழவைக்கும். குழந்தை ஓடித் திரிவதனால் இது மோசமடையும் என்று பயங்கொள்ளத் தேவையில்லை. மனம் சந்தோஷமடையத் தானாக மாறக்கூடிய இதற்கு வேறு மருந்து அவசியமில்லை.

மன எழுச்சி காரணமாய் ஏற்படும் வயிற்றுவலி அநேகமாய்த் தொப்புழ் அடியில் ஏற்படும். சிறுகுடலில் செல்கின்ற உணவு பல மூலைகளைத் தாண்டிப் போகவேண்டி இருக்கிறது. குழந்தை மன எழுச்சி கொள்ளும் போது உணவைக் கொண்டு செல்லப் பயன்படும் சுற்றுச் சுருக்கசைவுகள் பலமாக இருப்பதால் வயிற்று வலி ஏற்படுகிறது.

சற்றே வயது வந்த குழந்தை இத்தகைய வலியைத் தலையில் உணரும். கண்பார்வையில் ஏற்படக்கூடிய சிறு குறைபாடுகள் இத்தகைய தலையிடிக்குக் காரணமாயிருக்கலாமாயினும் பாடசாலையில் ஏற்படும் பிரச்சினைகளே இந்த ஐந்து அல்லது ஆறு வயதுக்குழந்தையின் தலைவலிக்கு முக்கிய காரணமாயிருக்கும், பாடசாலைப் பிரச்சினை தீரும்போது தலையிடி தானாக மறைந்து விடும்.

இவ்வாறு முறைப்பாடு கூறுகின்ற குழந்தைகளில் அவர்களின் மன எழுச்சிக்கான காரணத்தைத் தேடிக் கண்டுபிடித்து அதனைத் தீர்க்கவேண்டியது பெற்றோரின் கடமையாகும். கால்வலி, வயிற்று வலிக் குழந்தைகளை விட்டுத் தலையிடிக் குழந்தையின் பிரச்சினை பெரும்பாலும் ஆழமானதாயிருக்கும்.

இவ்விடயங்கள் பற்றிய அறிவும், பொறுமையும், குழந்தை நலமாக இருக்க வேண்டும் என்ற அக்கறையும் கொண்ட பெற்றோர் குழந்தையின் அழுகையைப் புரிந்து கொள்ளவும் அதன் மூலம் அதனை அழாமல் தடுக்கவும் முடியும்.

(ஆதாரக் கருத்துக்கள்:
டாக்டர் ஜொலி)

---

பா நாடகம்:

# ஆசைக் கடலின் ஆழச் சுழிகள்

சொக்கன்

## காட்சி ஆறு

(சச்சந்தனின் அந்தப்புரம்)

சச்: விசயைஎன் விசயை அன்பே;
விரைந்தோடி வாஎன் கண்ணே!

விச: என்றுமே இல்லா இந்த
ஆனந்தம் எதற்கோ வேறுபேத!

சச்: களத்தினில் போர்நடாத்திக்
கலைத்துவெம் பகையை வென்றேன்
உளத்தினில் வீரம் பொங்க
உன்முன்பு வரின்என் செய்வாய்?

விச: ஆராத்தி எடுப்பேன், வெற்றித்
திலகமும் இடுவேன் பூவின்
அரத்தை உமக்கணிந்தே
ஆனந்தப் பாட்டிசைப்பேன்.

சச்: அதுஒன்றும் வேண்டாம். உன்றன்
அச்சவாரத்தின் மிச்சம்
எதுஎனத் தெரிந்து மாரி
எனக்கதைப் பொழிவாய் கண்ணே!

விச: களம்எது? விழுப்புண் (மார்பில் பெறும் வீரப்புண்) எங்கே?
கலைத்திட்ட பகைவர் யாரோ?
வளம்அழி பகைவர் தம்மால்
வந்திட்ட திறையைக் காட்டும்.

சச்; அந்தநல் வெற்றி இல்லை.
அதனிலும் பெரிய வெற்றி!

விச: சிந்தையில் தெளியேன் அன்பே!
சிறிதனை விளக்க வேண்டும்.

சச்: அவையினர் [illegible] ஏற்கக் கூறி
அமைச்சன்கட்டியனுக்கென்றன்
சுமையினை அளித்து வென்று
சுதந்திரனாகி விட்டேன்.

விச: (மௌனம்)

சச்; பாராதே குனிந்து மௌனப்
பாவையாய் நிற்க வேண்டாம்
ஈராண்டு பிரியா இன்பம்
இதற்கேனோ கவலை? சொல்வாய்

விச: ஈராண்டு பலஆண்டாகி
இந்நாடும் அவன்நாடாகிப்
பாராண்டோம் என்று சொல்லும்
பழஞ்சொல்லாய் ஆகி விட்டால்...?

சச்: பெண்பேதைத் தனத்தினாலே
பெரியோனும் நண்பன் உள்ளம்
புண்ணாக வைக்காதே இப்
பூமிஎங்களுக்கே சொந்தம்.

விச: (பெருமூச்சோடு)
ஆசைக்கே அடிமையாகி
அழிவதே கருமம் என்றால்
பேசத்தான் என்ன உண்டு?
பெருமான்தான் காக்க வேண்டும்.

சச்! மற, எழு, வாஎன் மார்பை
மன்மதன் அரங் கமாக்கி
இறுதியில்லாத இன்பம்
எனக்குநீ அளிப்பாய், இந்த
உறவினால் சுவர்க்கம் வேறே
எங்கணும் இல்லை என்னும்
உறுதியைப் பெறுவோம், தானை
[illegible]

## காட்சி ஏழு

[கட்டியங்காரனின் மாளிகை. கட்டியங்காரனும் தளபதி மதனனும் உரையாடுகின்றனர்].

மத; அரசனும் பதவியை அடைந்தபின் னர்நீ
முற்றிலும் மாறி விட்டனை கட்டிய!

கட்: சொல்லுவாய். சொல்லுவாய். மைத்துன மதனனே!
சொல்லுவாய், உனக்கென்ன சொல்லுவாய் பாரம்
என்தலை நெரித்தெனை இக்கட்டிற்குள்
தள்ளிவிட்டதடா தப்புவது எப்படி?

மத: நல்லது செய்தேன் மைத்துனா! நீயோ
தீமை என்றால் நான்என் செய்வேன்?

கட்: அரியணை ஏறிஅமர்ந்து அரசாட்சி
புரிவது எனக்குப் பெருமைதான் ஆனால்............
நிரந்தரமில்லா இரண்டாண் டாட்சியால்
எனக்கேற்படும்பயன் என்ன என்றுதான்
நினைக்கிறேன் அன்றியும்......?

மத; அன்றியும் என்றால்...?

கட்: அரச மரபினன் அல்லேன் அதுவும்
காரணம் என்றன் கருத்தழிவுக்கு.

மத: தாழ்வுச் சிக்கலால் தலைதடுமாறிநீ
வாழ்வை வலிய வந்ததை ஏற்க
முடியா நிலையில் முடங்கப் பார்க்கிறாய்'

கட்: அவையினர் படைகுடி
அனைத்தும் எனக்கு
மாறாய் இருக்கையில் மாண்புடன் அரசை
நடத்துவது எப்படி...?

மத: ......எல்லாம் நடத்தலாம்
சொல்லக் கேள்என் இன்னுயிர் மைத்துனா!
பதவி உயர்த்திப் பரிவு போல் அவைக்கு
அள்ளித் திருவை அளித்தால் உன்பின்
வாலைச் சுருட்டி நாயாய்க் கிடக்கும்.


(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### "இது சிதம்பரமடா" எனக் கூறி கடையிற்சாமிகள்

### கொண்டாடிய சிவன்கோயிலில் இருக்கிறது

# நாவலர் பூஜை செய்த விநாயகர் விக்கிரகம்!



நாவலர் பெருமான் பூஜையில் வைத்து வணங்கிய சிறிய விநாயகர் விக்கிரகம் இப்பொழுது எங்கிருக்கிறது தெரியுமா?

யாழ்ப்பாண நகரில் இப்பொழுதும் ஒரு சிறிய அழகான கோயிலில் அது பூஜையில் இருக்கிறது.

அந்தக் கோயில் சிறிய கோயில்தான். மூர்த்தி சிறிதானுலும் கீர்த்தி பெரிதென் பார்கள். இந்தக் கோயிலின் கீர்த்தி இன்னமும் சரியாகப் பலருக்கும் தெரியவரவில்லை யென்பது கவலைக்குரியது.

ஆயினும் இப்பொழுது அந்தக் கோயிலைச் சூழ்ந்து வளர்ந்து வரும் சூழ்நிலை அதன் கீர்த்தியை சைவ உலகம் அறியும் காலம் வெகு தூரத்தில் இல்லையென்பதையே எடுத்துக் காட்டுகிறது.

''இது சிதம்பரமடா?'' என்று கடையிற்சாமி குறிப்பிட்டுக் கூறிய கோயிலில் நடேசர் அருகே நாவலர் வைத்துப் பூஜித்து வணங்கிய சிறிய விநாயகர் விக்கிரகம் இன்றும் பூஜையில் வைத்து வணங்கப் பெறறு வருகிறது.

''இது சிதம்பரமடா:'' என்று சொன்ன கடையிற்சாமி யார்?

**கடையிற் சாமிகள்**


யாழ்ப்பாணத்தின் தவமுனிவர் யோர்கசுவாமிகளின் குரு செல்லப்பா சுவாமிகள் தேரடிச் செல்லப்பர் என்றும் இவர் அழைக்கப்படுவார். நல்லூர் தேரடியில்தான் செல்லப்பா சுவாமிகளை யோகர் சுவாமிகள் முதலில் கண்டார். அங்குதான் செல்லப்பா சுவாமிகளால் யோகர் ஆட்கொள்ளப்பட்டார்.

யோகர் சுவாமிகளின் குருவாகிய செல்லப்பா சுவாமிகளின் ஞானகுருவே கடையிற் சுவாமிகளாவர்.

இந்த விபரங்களையெல்லாம் தெரிவிப்பவர் இன்று அமெரிக்காவில் குடியேறி அமெரிக்கப் பிரஜையாகியுள்ளவர்.

அவர் எங்கே வாழ்ந்தாலும் அவரது உள்ளம் என்றும் யாழ்ப்பாணத்திலும் ''இது சிதம்பரமடா'' என்ற நடேசர் கோயிலிலும் லயித்து நிற்கின்றது.

யாழ்ப்பாணம் வண்ணுர் பண்ணையில் கடையிற்சாமி



கோயில் ஒழுங்கையில் கடையிற்சாமி கோயிலுக்கு அருகே அமைந்துள்ள நடேசர் கோயில் தான் கடையிற் சாமியார் கூறிய ''இது சிதம்பரமடா'' என்ற கோயிலாகும்.

இங்குள்ள நடேசர் விக்கிரகமு, கோயில் அமைப்பும் அசல் சிதம்பரம் தான்.

இந்த நடேசர் கோயில் அமைந்துள்ள காணியில்தான் இப்போது குருகுலம் அமைக்கப் பெற்று வளர்ச்சி பெற்று வருகிறது.

குருகுலம் அமைப்பதற்கான காணியை நன்கொடையாக அளித்திருப்பவர்தான் நான் முன்னே குறிப்பிட்ட இன்றைய அமெரிக்கப் பிரஜை!

செட்டியார் என்று அவரது அமெரிக்க நண்பர்களாலும் மற்றும் பலராலும் அன்புடன் அழைக்கப்பெற்று வரும் திரு. பி. சி. சுப்பிரமணியன். யாழ்ப்பாணத்திலிருந்து ''கப்பலோட்டிய தமிழன்'' ஒருவரின் பரம்பரையைச் சேர்ந்தவர். அந்தக்காலத்தில் சிதம்பரம், காசி, சாரநாத், புத்தகாயா போன்ற புனித ஸ்தலங்களுக்கு கப்பல் விட்ட சிதம்பர சுப்பையாச் செட்டியாரின் கொள்ளுப் பேரன் தான் இந்த பி. சி. சுப்பிரமணியன் எனப்படும் திரு. செட்டியார். வெள்ளையருக்கெதிராகக் கப்பலோட்டி தமிழர்களால் ''கப்பலோட்டிய தமிழன்'' என்ற பெயர் பெற்ற. வ. உ. சி. போலல்லாது 1840-ம் ஆண்டில் ''யாழ்ப்பாணப்பட்ட வணிகர்'' (Merchant of Jaffna Pattam) என்று அன்றைய இலங்கையின் பிரிட்டிஷ் ஆளுநர் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர். அக்காலத்திலேயே மூன்று கப்பல்களைச் சொந்தமாக வைத்திருந்து வணிகத்தில் ஈடுபட்டதுடன் யாத்திரைக்கும் வழிகாட்டியவர் சிதம்பரசுப்பையாச் செட்டியார்.

நாவலர் பெருமானுக்குச் சகோதரர்கள் பலர் இருந்த போதிலும் அவரது இறுதிக் கடமைகளைச் செய்வதற்கு திரு. செட்டியார் என்ற பி. சி. சுப்பிரமணியனின் தாத்தாவாகிய சபாபதிச் செட்டியாரையே நாவலர் தேர்ந்தெடுத்தார். சபாபதிச் செட்டியாரின் சகோதரர் பசுபதிச் செட்டியார் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் ஸ்தாபகர்களில ஒருவராவர். ஸ் வ பரிபாலன சபையை நிறுவியவர்களுள் இவரும் ஒருவர். இலங்கையில் இந்துக்களுக்கென வெளிவந்து கொண்டிருக்கும் 'இந்து சாதனம்' பத்திரிகையை ஸ்தாபித்தவர்களில் பசுபதிச் செட்டியாரும் ஒருவராவர்.

''ஈழத்துச் சிதம்பரமடா'' என்று கடையிற் சுவாமி யார் [illegible] அமைத்தவர் திரு. செட்டியார் என்ற பி. சி. சுப்பிரமணியனின் தந்தையாரான பேரம்பலம் செட்டியாராவார். சிதம்பரம் வடிவத்தில் அமைக்கப் பட்டுள்ள இக்கோயிலின்காணியில் தான் இரண்டு பரப்புக் காணியை சிவானந்த குருகுலம் அமைப்பதற்கு திரு. செட்டியார் நன்கொடையாக வழங்கியிருக்கிறார்.

இக்காணி வேறு எதற்கும் பயன் படுத்தப்படக் கூடாது என்பது திரு. செட்டியாரின் நிபந்தனை. குருகுலம் இங்கு நடைபெறவில்லையானல்காணி திருப்பிக் கொடுக்கப்பட்டுவிட வேண்டும்.

**குருகுலத் தின் அதிபர்**

இங்கு குருகுலத்தின் அதிபராக இப்போதிருப்பவர் வித்தியாசாகர நியாயசிரோமணி கே. சுப்பிரமண்ய சாஸ்திரியாவார். இவர் காஞ்சிப் பெரியவாள் ஆஸ்ரமத்தில் பயின்றவர்.

1921-ம் ஆண்டு மார்ச் மாதம் பிறந்த திரு. செட்டியார் மல்யுத்த வீரருமாவார். இன்னும் உடற்பயிற்சி செய்து வரும் திரு. செட்டியார யோகாசனத்திலும் வல்லுநர். 'வீரகேசரி' யில் அந்நாளில் புகைப்பட விளக்கங்களுடன் யோகாசனம் பற்றித் தொடர் கட்டுரைகள் பல எழுதி வந்தவர். சுவாமி சிவானந்த சரஸ்வதியே இவரது யோகாசன சேவையைப் பாராட்டி ஆசி கூறியிருக்கிறார். தமிழ் நாட்டின் தலைநகராம் சென்னையில் அந்நாளிலேயே யோகாசனங்களை முறைப்படி செய்து காட்டி 'இந்து' பத்திரிகையாலும் சென்னை சட்டசபை சபாநாயகராக இருந்த புலுசு சாம்பமூர்த்தி ஆகியோராலும் அண்ணுமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தராகவிருந்த பேராசிரியர் எம். இரத்தினசாமி அவர்களினுலும் மற்றும் பலராலும் பாராட்டப் பெற்றதுடன் இலங்கையில் யோகாசனக் கலையைப் பரப்புவதற்கு திரு. பி. சுப்பிரமணியன் உதவ வேண்டுமென்று பொல்கசோவித்த கிரிகம்பமுனுவ புராண விகாரை பிரதம குருவண. ஜி. பிரஞாசார தேரோவினுல் கேட்டுக்கொள்டப்பட்டவருமாவார்.

நாவலர் தமிழ் சைவம் பரப்பு தமிழ்நாடு சென்றது போல் யோகாசனத்தைத் தமிழ் நாட்டிலேயே பரப்புவதற்குச் சென்றவர் செட்டியார்.

விளம்பரத்துறையிலும் ஒளிவிட்ட திரு. செட்டியார் 'சுதந்திரன்' பத்திரிகையிலும் 'வீரகேசரி' பத்திரிகையிலும் பணியாற்றி சிறந்த பத்திரிகையாளன் என்ற பெயரும் பெற்றவர்.

1951ம் ஆண்டு ஜூலைமாதம் இலங்கையிலுள்ள அமெரிக்க தகவல் பிரிவில் சேர்ந்த திரு. பி. சி. சுப்பிரமணியன் செட்டியார் இருபத்திரண்டு வருட சேவையின் பின் 1973ம் ஆண்டில் ஓய்வுபெற்றார்.

சர்ச்சைக்குரிய அமெரிக்க வெளிவிவகார அமைச்சராக விளங்கிய திரு. ஜோன். பொஸ்டர் டலஸ் இலங்கைக்கு விஜயம்செய்தபோது ''உங்கள் மூதாதையருக்கும் யாழ்ப்பாணத்துக்கும் தொடர்புண்டு. அவர்கள் வாழ்ந்து மடிந்த இடம் இதுதான்'' என்று புகைப்படப் பிரதிகள் அடங்கிய கோவையொன்றை அவருக்கு வழங்கி ஆச்சரியத்தில் மூழ்கடித்து அவரைப் பிரமிக்க வைத்தவர் திரு. செட்டியார்.

''எத்தனையோ நாடுகளுக்கு நான் போயிருக்கிறேன். இப்படி என்னை வசமிழக்கச்செய்த எதையும் இதுவரை நான் பெற்றதில்லை'' என்று திரு. டல்லஸ் தெரிவித்தார்.

அந்தப் புகைப்படக்கோவை இப்பொழுதும் டல்லசின் வாரி

(9-ம் பக்கம் பார்க்க)

## ஐயகோ எங்கள் பாரத தேசமே!

ஐயகோ எங்கள் பாரத தேசமே
அகில லோகத்தின் ஆத்மீகத்தெய்வமே
வையகமே புகழ்கின்ற பெருமைசேர்
மாபெரும் ஞான வள்ளல்கள் அன்னையே
சைவ வைஷ்ணவ சமண பௌத்தமா
சமயங்கள் தந்த தத்துவ பீடமே
நையவே சில கைதிகள் கண்களை
நாண மின்றிப் பறித்தனை ஞாயமோ?

எந்த நாட்டிலும் பொலிசார் செயல்களோ
இனிமையானவை அல்லத்தான்; ஆயினும்
இந்தவாறு கொடுமைப் படுத்துதல்
இந்தியாவிலா? என்கின்ற போதினில்
விந்தைதான்! அந்தப் புத்தரும் காந்தியும்
விட்டுச் சென்றிட்ட அன்பு கருணையை
இந்த ஞாலத்தில் எங்குதான் தேடுவோம்
இச்செயல் பெரும் பாதகமாகுமாம்.

கம்பி கொண்டந்த காதகர் கண்களை
கருணையின்றியே குத்தும் பொழுதினில்
வெம்பி வெம்பி அழுதிருப்பார்; உளம்
வேதனை தனில் வெந்திருப்பார்; தமை
நம்பி வாழ்ந்திருப்போரை நினைந்துமே
நைந்து நொந்து வெடித்திருப்பார்; இந்த
அம்புவி தனில் இப்படி எத்தனை
ஆயிரம்பேர் அழிந்தொழிந்தார்களோ!

மனிதர்கள் தம் உரிமைத் தினத்தினை
மாபெரும் மேடை கட்டி அதிலேறி
இனிக்க மற்றவர் மெச்சவே பேசிடும்
இந்த நாடகம் ஏன் தான் நடக்குதோ
மனிதர்கள் தமை மனிதர்களாகவே
மதிக்க வில்லையாம் அதற்குப் பிறகிந்த
மனிதர்கள் உரிமைத் தினம் கொண்டாடும்
ாயவேலையை என்னென்று சொல்வது.

**காரை செ. சுந்தரம்பிள்ளை**

கோழிப் பண்ணையில் இலாபம் பெற டயமிக்ஸ்
டயமிக்ஸ் – அமெரிக்காவில் டயமண்ட் ஷம்ரொக் ஸ்தாபனத்திருல் விஞ்ஞான முறைப்படி தயாரிக்கப்பட்ட பெறுமதிமிக்க இத் தீனி உயர்ரக விட்டமின்களும் தாதுப்பொருள்களும் கொண்டது. விலையோ சகாயம்.
முட்டைக் கோழித் தீன் 450 கிராம் பை ரூ. 20/90
குஞ்சுக் கோழி ஆரம்பத் தீன்,
இறைச்சிக் கோழித் தீன் 450 கிராம் பை ரூ. 21/90
25 கிலோ கிராம் பைகளிலும் கிடைக்கும்
இலங்கையில் ஏக விநியோகஸ்தர்கள்
மாஸ்டர் ஃபீட்ஸ் லிமிட்டெட்
30, ஃபிறேஸர் அவனியூ, தெஹிவளை. தொலைபேசி: 071-5123
இலங்கையின் எல்லாப் பாகங்களிலும் கிடைக்கும்.
டயமிக்ஸ்–இலாபம் தரும் கோழிப்பண்ணைக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜே. கிருஷ்ணமூர்த்தி பற்றிய ஒரு சர்ச்சையும் விளக்கமும்



# “கடவுள்நம்பிக்கை இல்லை” என்றால் ‘நாஸ்திகர்’ என்று அர்த்தமா?

நா. செல்லப்பா

சென்ற மாதம் தத்துவ ஞானி J. கிருஷ்ணமூர்த்தி கொழும்புக்கு வந்திருந்தபோது பல பத்திரிகை நிருபர்கள் அவரைப் பேட்டியிட்டனர். அப்பேட்டியின்போது, அவர் தனக்குக் கடவுள் நம்பிக்கை இல்லையெனக் குறிப்பிட்டதாக அறிகிறோம். இதைச் கேள்வியுற்ற பல ஆஸ்திகர்கள், ஆச்சரியமும், அதிர்ச்சியும், சீற்றமும் கொண்டனர். சிலர், ‘‘பத்திரிகை நிருபர்கள், கிருஷ்ணமூர்த்தியைச் சரிவரப் புரிந்து கொள்ளாது செய்த கோளாறு இது’’வெனச் சமாதானம் கூறினர். பத்திரிகை நிருபர்களோ, தாம் கிருஷ்ணமூர்த்தியினுடைய கூற்றை உள்ளபடியே திரிபுமறைவின்றி வெளியிட்டுள்ளதாக நிச்சயப்படுத்துகின்றனர். எனவே நிருபர்கள் மீது குறை கூறிப் பிரயோசனமில்லை.

இது விடயம் பற்றி அண்மையில் ஒரு சமய ஸ்தாபனச் செயலாளர் ஒருவருக்கும், கிருஷ்ணமூர்த்தி நேயர் ஒருவருக்குமிடையே பலத்த வாக்குவாதம் ஏற்பட்டதை அவதானித்தேன். ‘‘நாவலர் பெருமான் கட்டிக்காத்த கடவுள் நம்பிக்கையில் மண்போடுகிற கிருஷ்ணமூர்த்தி ஒரு நாஸ்திகனாகும். அவருடைய நேயராகிய உமக்குக் கடவுள் யார்? நீர் கிருஷ்ணமூர்த்தியையா வணங்குகிறீர்?’’ எனச் செயலாளர் வினவினர்.

கி. நேயர்: வணக்கமும், நம்பிக்கையும் பரிபூரணத்துவத்தை வழுவற உணர்வதற்கு அவசியமில்லை. மூடநம்பிக்கையிலும் பார்க்க நாஸ்திகம் நல்லதாகும். நம்பிக்கையற்றவரை நாஸ்திகர் என நீங்கள் எவ்விதம் முடிபுசெய்ய இயலும்? நீங்கள் எத்தனை வருஷங்களாகக் கடவுள் நம்பிக்கை வைத்திருக்கிறீர்கள்? எப்பவாகிலும், நம்பிக்கை உங்களுக்குக் கடவுளைக் காட்டியதுண்டா! உண்மை கூறுங்கள். மனவாசகம் மூலம் எனக்குக் கடவுளைக் கண்டதாகப் பொய் கூறவேண்டாம்.’’

செயலாளர்! கல்லிலேயும் கடவுளைக் காண்கிற நம்மால் மனவாசக மூலம் கடவுளைக் காணமுடியாதென நீர் ஏன் நினைக்கிறீர்? நம்பிக்கைதான் நமக்குக் கடவுளைக் காட்டும். நம்பிக்கை இல்லாத நீர் கடவுளைப் பற்றிக் கதைப்பதற்கு என்ன உரிமையுண்டு? பேசாமல் வாயைப் பொத்திக் கொண்டுபோம். நமது சமயத்தையும், இளைஞர்களையும் கெடுக்காதீர். பிஞ்சு நெஞ்சில் நஞ்சு எண்ணங்களை விதைக்காதீர். புண்ணியம் செய்ய இயலாவிடின் பாவமாவது செய்யாதிரும். நரகத்தை நாடாதீர்.

கி. நே.. எனது உரிமையைப் பறிக்க உங்களுக்கு அதிகாரம் எதுவுமில்லை. உங்களுடைய உரிமையை நான் பறிக்க வரவில்லை. வீண் பேச்சு எதற்கு? அற்ப அறிவு ஆபத்தானது. பாவபுண்ணியம், நம்பிக்கை, அவநம்பிக்கை முதலியவற்றின் இருமை வகை தெரியாத நீங்கள், அறத்தைப் பற்றியோ ஆண்டவனைப் பற்றியோ அடுக்குமொழி கூறி என்ன பிரயோசனம்! வள்ளுவன் கூறிய ‘‘இருமை வகை தெரிந்து ஈண்டறம் பூணுதல்’’ புரியாத நீங்கள், உங்களைச் சைவத் தமிழன் எனக் கூறுதல் பொருத்தமற்றதாகும். நல்லது. நான் வாயைப் பொத்திக்கொண்டு போகிறேன். மெய்புணர்தலுக்கு இடம்கொடாது, மன இந்திரிய உணர்ச்சிவசப்பட்டு ஆத்திரம்கொள்ளும் உங்களுடன் என்ன பேச்சு?’’

இங்ஙனம் கூறிய கிருஷ்ணமூர்த்தி நேயர் செயலாளரிடமிருந்து திடீரென விலகிப் போய்விட்டார். உண்மை விளக்கத்துக்கு வேண்டிய ஒரு சிறு விதையை மட்டும் இட்டுச் சென்றார். அதன் முளை இயற்கையாகவே ‘‘நம்பிக்கை இல்லாதவர் நாஸ்திகர் தானா?’’ என மெல்லமெல்ல ஒரு விசாரணையாகக் கிளம்புகிறது.

## நம்பிக்கை

உலகியல் வாழ்க்கையில், தொழில்நுட்பத் துறையில் நம்பிக்கை மிகவும் அவசியம் என்பது புலப்படுகிறது. நம்பிக்கை எண்ணங்களால் ஆக்கப்பட்டு நினைவு முத்திரையாக மூளையில் பதியவைப்பதாகும். நம்பிக்கையின்றேல் உலகியல் வாழ்க்கையில் நாம் முன்னேறுதல் முடியாது. எண்ணங்கள் இன்றேல் நம்பிக்கையை ஆக்கிக்கொள்ள இயலாது. எண்ணமும், நம்பிக்கையும் வேறல்ல என்ற உண்மை விளக்கம் உண்டாகிறது. எண்ணங்கள் யாவும் இருமை வகையாகிய எதிர்ப்புச் சக்திகளை உடையனவாகும். நம்பிக்கையற்ற மனம் அவநம்பிக்கைக்கு எதிரானதொரு நம்பிக்கையை உண்டு பண்ணுவதை நாம் அவதானித்து உணரலாம். மனமுயற்சியால் பெறவேண்டிய காரியங்களுக்கு நம்பிக்கை இன்றியமையாததாகும். செயற்கைச் செயற்பாடுகள் மனமுயற்சியால் ஆவனவாகும்.

இயற்கைச் செயற்பாடுகள் மனச் செயற்பாட்டைக் கடந்தனவாகும். நாம் நம்பினால் என்ன? நம்பாவிட்டால் என்ன? சூரியனின் இயக்கம் நடந்துகொண்டே இருக்கும். கடவுளைப் பற்றிய உண்மை விளக்கம் மனவாசகம் கடந்ததென மெய்கண்ட சாத்திரம் திடமாகக் கூறுகிறது. மனவாசகத்தால் ஆக்கப்படும் எண்ணங்களைக் கடந்ததே கடவுளாகும். எனவே நம்பிக்கையையும் கடந்திருப்பது பரம்பொருளாகும். யாழ்ப்பாணத்துத் தத்துவஞானி யோகசுவாமிகள், ‘‘நாம் அறியோம்.’’ எனவே கடவுளைப் பற்றிக் கூறியுள்ளார். அதன் பொருள், மனச் செயற்பாட்டினால் நாம் கடவுளை அறியோம் என்பதாகும். கிருஷ்ணமூர்த்தி தன்னிடம் கடவுள் நம்பிக்கை இல்லையென்பதும் இத்தகையதேயாகும். கடவுள் நம்பிக்கை இல்லையென்பது கடவுள் இல்லையென்பதாகாது. மனதைக் கடந்த கடவுளை, மனதுக்குட்பட்ட நம்பிக்கையினால் காணமுடியாதென்னும் மெய்யுணர்தலினாலேயே அவர் தன்னிடம் கடவுள் நம்பிக்கை இல்லை என்கிறார். மனச் சார்பு உணர்ந்து, அச்சார்பு கெட ஒழுகுதலே மெய்யுணர்தல் பெறும் வழியென வள்ளுவரும் வலியுறுத்துகிறார். சமய அபிமானங் கொண்டு சண்டையிடுதல் பேதமையாகும்.

கிருஷ்ணமூர்த்தியை நாஸ்திகனெனத் தூற்றுவதனால் எவருக்கும் ஞானபோதம் உண்டாகப்போவதில்லை. போற்றுதலும், தூற்றுதலும் இருமைவகை மனச்செயற்பாடேயாகும். ஆஸ்திகர், நாஸ்திகர் என்பதும்கூட அதன் விளைவாகும். பொய்யைப் பொய்யாகக் காணமாட்டாதவர், மெய்யுணர்தல் பெறுதல் எங்ஙனம்? தீமையையும், துன்பத்தையும், போட்டியையும், பொறாமையையும் அதர்மத்தையும், அநியாயத்தையும், அச்சத்தையும், அகங்காரத்தையும் காணுகிற மனிதன் அவற்றைஎதிர்நோக்கி அவற்றின் மூலவேரை முழுமையாகஉணரமுடியாத சோம்பேறியாக மாறி, அவற்றை அப்படியே விட்டு விலகித் தனது கையாலும், மனத்தாலும் அவற்றை நீக்கும் பல செயற்கைக் கடவுள்களைச் சிருஷ்டிக்கிறான். அச்செயற்கைக் கடவுள்களிடம் நம்பிக்கை பூண்டால் உண்மை விளக்கமும் வீடுபேறும் பெறலாம் என உடதேசஞ் செய்கிறான். நம்பிக்கையற்வர்களைப் பாவிகளென்றும், அவர்கள் மீளா நரகத்திற்கு ஆளாவார்கள் என்றும் அச்சம் ஊட்டுகிறான். பிரசாரஞ் செய்கிறான். இதனால் மனிதனின் உளவியற் பிரச்னைகள் தீர்வதாகக் காணப்படவில்லை. பிரச்னைகளிலிருந்து விலகி ஓடுவதாலோ, அவற்றை எதிர்ப்பதாலோ அல்லது அவற்றுக்குச் சாதகபாதகமான நீதி நியாயம்பேசுவதனாலோ அவற்றைத் தீர்த்துவைக்க இயலாது. விழிப்புணர்வும், அவதான ஆற்றலும், உள்ளொளியும், திருவருள் மலர்ச்சியும்தான் பிரச்னைகளைத் தீர்க்க உதவும். கிருஷ்ணமூர்த்தி இதனையே வலியுறுத்துகிறார்.



## பாலகனாய் வந்தார்!

வஞ்சனையும் பொய்களவும் பொல்லாத சூதும்
அஞ்சவரும் பாவங்களும் அறியாமையாவும்
மிஞ்சிடவே மேதினியில் மேவும் பரம்பொருளும்
பஞ்சைமரி யாள் வயிற்றில் பாலகனாய் வந்தான்.

பாவிகளை உய்விக்க பரமன் இங்குவந்தான்
பாவிகளோ பரமனையே பரிகாசம் செய்தார்
ஏவிவிடும் சாத்தானும் ஏளனம் புரிந்தான்
தேவிமரி யாள்மகனே தெளிவோடு நின்றான்!

அன்புநெறி தழைத்தோங்க ஆணவமடங்க,
துன்பமெலாம் அகன்றுலகு தூயவழி நாட
என்புருக ஊன்நோக ஏசு பணி செய்தார்
தன்னலமொ ழிந்துலகு வாழ வழிகண்டார்.

தூயநெறி நின்றவரைத் தூற்றிச்சில புல்லோர்
நேயர்மனம் நோகும்படி நிட்டூரம் செய்தார்,
ஆயரவர் ஆவிதனை அவித்துவிட வெண்ணி
தீயர்வதை செய்துசிலு வையிலேற்றிக் கொன்றார்.

கொல்லும்பொழு தேனுமனம் கோணல் கொளாதையன்
சொல்லுகிறார் ‘‘என்பிதாவே இவர்க்கிரங்கும்’’ என்றே
அல்லலுறும் அந்நிலையில் அங்கிருந்த மற்றோர்
‘‘வெல்லுவையோ’’ எனவிளித்து வேதனை புரிந்தார்.

சிலுவையிலே மரித்தவரை சீரிழிந்த புல்லோர்
வலுமிகுந்த கல்லறைக்குள் இட்டடைத்துச் சென்றார்
நலிவுதரும் மூன்றுதினம் நகர்ந்திடவே மீண்டும்
எழுந்தனரே ஏசுபிரான் எல்லோர்க்கும் மீட்சி!

— பன்னீரான்

கச்சியப்பர் உவமை நயம்—16

# வீரரை நிகர்க்கும் விண்முகில்கள்

வ. குகசர்மா

மழை பெய்யும் முகில்களை போர் வீரராக உருவகித்தனர் புலவர்கள். மழை முகில்கள் செலுத்தும் அம்புகள், முழக்கம் வில்லின் நாணோசை, முகில்களின் பகைவர் கோடை, சிலநேரங்களில் சூரியனையும் கூறுவார்கள். இவ்வாறு பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணத்தில் கூறும் ஓர் காட்சியை ஆரம்பத்தில் பார்ப்போம். ஒல்லென்று வாயைத் திறந்து இடித்து சூரியன் ஒளியும் மழுங்க மின்னலெனும் வாட்படையை வீசி, இந்திரவில்லைப் பிடித்து, நீர் என்னும் அம்பை கோடையின் மேற்பெய்து பெரும் போர் முடிக்க முகில்கள் வந்தன.

‘‘இடித்து வாய்திறந்தொல்
லென வெல்லொலி மழுங்க
தடித்து வான்புடை விதிர்
த்துநின் றிந்திர சாபம்
பிடித்து நீளம்பு சோடை
மேற் பெய்துவெம்
பெரும்போர்
முடித்து நாமென வருதல்
போல் மொய்த்தன
கொண்மூ’’

இதைப்போலவே கச்சியப்பரும் சூரியனோடு போர் செய்யச் செல்லும் முகில்களின் தோற்றத்தை நமக்கு முன்னே கொண்டுவருகிறார். உலகத்தை வெப்பத்தினால் வருத்தும் சூரியனை முகில்கள் காணுகின்றன, அத்தச் சூரியனோடு போரச் செய்வோம் எனக் கருதிக் கோபங்கொள்ளுகின்றன. கோபத்தினால் முகில்களின் தேகம் வியர்க்கின்றது. வேர்வைத் துளிகள்போல் மழைத் துளிகள் சொரிகின்றன. வெள்ளை நிறம் பொருந்திய பற்களைக்காட்டி கோபச்சிரிப்புச் சிரித்து ‘‘சூரியனே என்னோடு போர்செய்ய வா’’ என ஆரவாரித்த தன்மைபோல மின்னி இடிக்கின்றன.

‘‘பார்த்தென துலகிடும்
பரிதி யென்னொடும்
போர்த்தொழில் புரிகெனப்
பொங்கு சீற்றத்தால்
வேர்த்தெனப் பனித்துவெள்
ளெயிறு விள்ளநக்
கார்த்தன வேதடித்
தசனி கான்றவே’’

மழை உலகிற்கு வேண்டிய தொன்று விவசாயிகள் மழையை விரும்பிவரவேற்பர். நீண்ட நாள் வறட்சி, எப்போ மழை வருமோ என்று எல்லாரும் வானத்தையே நோக்கி நிற்கின்றனர். மழைக் கருக்கொண்ட முகில்கள் வானத்தில் தோற்றுகின்றன. மழைத் துளிகளும் விழுகின்றன. மழையை எதிர்பார்த்தவர்கள் மகிழ்ச்சி அடைகிறார்கள், மின்னல் கண்ணொளியைப் பறிப்பது போன்று மின்னுகின்றது. காது செவிடாகுமோ என ஐயுறும் உரத்த இடியோசை எழுகின்றது. மழை முகிலைக் கண்டுமகிழ்ந்தவர்கள் இப்போ அச்சமடைகிறார்கள்.

தாரகன் போர்செய்தான். முருகப்பெருமானது வீரர்கள் வீரவாகுதேவரைத் தவிர மற்றையோர் யாவரும் தோற்றுவிட்டார்கள். தேவர்கள் ஏங்கினார்கள். தாரகனை வெல்ல வீரவாகு தேவர் வரவேண்டும்

(7ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாநாடகம்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டாண் டென்ன
இரண்டுநாள் போதும்
இவர்களின் மனங்களை
மெழுகென உருக்கி
நிரந்தர மாசநீ நிலைக்கலாம்
ஆட்சியில்......
கட்: அதனைநான் அறிவேன்
ஆனல் மக்கள்?
மத: மக்கள்? அவர்கள்
மரபுத் தளையால்
கட்டுண் டுள்ளனர் கட்டினை
அறுக்க
வழியா இல்லை.....?
கட்: இருந்தால் கூறு.
பழமையாய் வந்த பரம்
பரை அரச
முறைமையை விரும்பி
முதன்மைச் சச்சந்தனுக்கு
அளிப்போர் உள்ள வரைக்
கென் ஆட்சி
நிரந்தரம் ஆதல் எங்ஙனம்?
அறியேன்.
மத: (அட்டகாசமாய்ச்
சிரித்து)
சாமக் கிறக்கம் கண்களை
மறைக்கக்
கேவலம் பெண்முந் தானை
யைப் பற்றிக்
கிடக்கும் அடிமை அரசன்
என் பதனுல்
மேன்மை கொண்டிட விடு
வதே? முட்டாள்!
அவன்குறை எடுத்துநாம்
அடிக்கடி கூறி
மக்கள் மனத்தினை மாற்று
தல் எளிது.
கட்; சொல்லிவிட் டாய்நீ
சுலபம்என்று. ஆனல்....?
மத: "மன்னனை கடவுள்'
என்றகோட் பாட்டினை
மாற்றிடுங் காலம் வந்தது
இனிமேல்
மக்களே பெரியோர்! மக்
களே மன்னர்!
அவர்களின் ஆட்சிச் சின்
னமே அரசன்"
என்றோர் கருத்தினை
இடைவி டாமல்நாம்
சொல்லச் சொல்லச் சிந்தனை
பெருகும்
மக்களின் மனங்களில் விளக்
கள் எழஎழ
நாம்எம் கருத்தினை முடித்
தல் சுலபமே.
கட்: இதனல் என நு தலைக்
கும் தீமை
ஒருநாள் வந்திடும். உணர்ந்
திட இல்லைநீ
மத: ஓர்நாள் என்பது
நீ லைதூ ரத்தில்
உள்ளநாள். அதற்காய்க்
கைக்கெட் டியதை
வேண்டாம் என்று வெறுத்
தொதுக் காதே.
கட்: அது சரி. படை
யினர்.....?
மத: தளபதி நானே உனக்கு
உறு துணைஎனில்
படையினர் மாறுப்ப்
போவது எங்ஙனம்!
கட்: அரசனில் உள்ள
அபிமா னத்தால்
மரபினில் கொண்ட பற்றுப்
பால் அவர்கள்
எதிர்த்திடின் நீதான் எப்படி
அடக்குவாய்?
மத: அரண்மனைக் கருவூ
லத்தினில் இருந்து
வேண்டிய போதெலாம்
வேதன உயர்வினைச்
செய்தால் அவர்கள் சிறிதும்
எமக்கு
மாறுய்ச் செல்லார். மன்
னன் தொலைந்தான்.
கட்; என்னவோ உன்னை
நம்பிஇச் சூதில்
தாயம் உருட்டத் தயரா
கின்றேன்.
மத: (உற்சாகம் அளிக்கும்
குரலில்)
உருட்டடா தாயம் உனக்கு
நான் என்றும்
உறுதுணை ஆகி உயிரையுப்
ஈவேன்.
எவ்வகை யாயினும் ஏமாங்
கதத்தில்
புதியதோர் ஆட்சி பொலி
வுற எழுந்திட
என்னல் ஆன எதையுப்
செய்குவேன்.
முன்வை காலைப் பின்எடுக்
காதே
வெற்றிப் பாதையில் வீறு
நடையிட
முயல்வாய் மைத்துனு! அச்
சம் எதற்கோ?
கட்: அதுவும் சரிதான்
அச்சம் எதற்கோ?
(இசை)

# நத்தார் நற்சிந்தனை!



### ந. கனகநாயகம்

ரோமாபுரியில் நீரோ சக்கரவர்த்தியின் காலம். கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்படுகின்றனர். யேசுநாதரின் சிஷ்யர் பேதுரு ஆக்கிரமிப்புக்கு அஞ்சி அந்நகரை விட்டு வெளியேறுகிறார். இடையில் அவருக்கு ஒரு திவ்விய காட்சி "எங்கே போகிறாய்?" என்ற சொற்றொடர் அவர் முன் தோன்றுகிறது. தன் குருதேவன் இட்ட கடமையை விடுத்து ஓடும் தவறை உணருகிறார். இது தேவகட்டளை என உடனே ரோமாபுரிக்குத் திரும்புகிறார் - சுவிசேஷக் கடமைக்காக.

1980-ம் ஆண்டு முடிகிறது. புத்தாண்டு புலரும் சமயம் ஒரு வருஷத்தில் ஒரு முறையேனும், நாங்கள் ஒவ்வொருவரும் எங்கள் வாழ்க்கைப் பாதையில் சற்று நின்று சிந்தித்து "எங்கே போகிறோம்?" என்று எங்கள் மனச்சாட்சியையே கேட்பது அவசியம். வாழ்க்கை என்பது பிறப்பு, இருப்பு, இறப்பு - இவைமட்டுந்தானு? வாழ்க்கையின் நோக்கம் என்ன? மனிதனில் விலங்குமுண்டு, தேவனும் உண்டு.


முதலாவதாக மனிதன் பனிதனை வாழப்பழக வேண்டும். அவ்வாறு வாழ்ந்தால்சண்டை, சச்சரவு, பூசல் ஏன் உலக யுத்தங்களுக்கே இடமிராது இதற்காகவே எல்லாச் சமயங்களும் தீயகுணங்களாகிய அழுக்காறு, அவா, வெகுளி, இன்னுச்சொல், அகங்காரம் ஆகியவைகளை விலக்குகின்றன. யேசுநாதரும் அவ்வாறே தனது மலைப்பிரசங்கத்திலும், "நல்ல சமாரியன்" போன்ற கதைகள் மூலமும் விளக்கியுள்ளார். "உன்னைப் போலவே, உன் அயலவனையும் நேசி" என்று "அயலவன்" என்பதற்கு சற்றுநேரம் இலக்கணம் கூறுமுகமாக அவன் அயலில் இருப்பவன் மட்டும் அல்லன். எங்கேயோ தனித்த காட்டுப் பிரதேசத்தில் கொள்ளைக் கூட்டத்தில் அகப்பட்டுத் தவிக்கும் யாருமற்ற, யாருமறியாத ஒருவனும் இருக்கலாம் என்று பிரித்துரைத்து விளக்கினுர். மேலும் பகைமையை ஒழிக்கும்படியும், தான் செய்த குற்றங்களுக்கு பச்சாதாபப்படும்படியும், மற்றவர்களின் குற்றங்களை மன்னிக்கும் படியும் வேண்டினர்.

சைவ சமயத்தின் சாரமாகிய திருமந்திரமும் அன்பையே வலியுறுத்துகிறது.

"அன்பும் சிவமும்
இரண்டென்பர் அறிகிலார்
அன்பே சிவமாவதாகும்
அறிகிலார்
அன்பே சிவமா தாகும்
அறிந்தபின்
அன்பே சிவமாய்
அமர்ந்திருந்தாரே"

முதலாவது உலக யுத்தத்தில் (1914—19) நடந்த ஒரு சம்பவம் வருமாறு: யுத்த முனையில் நெருக்கடி. இடம் ஒல்லாந்து தேசம். இரு பக்கப் படைகளும் அக்கால முறைப்படி கிடங்குகளில் துப்பாங்கிகளுடன் பதுங்கியிருந்தனர். ஆனல் அன்று நத்தார். என்ன ஆச்சரியம்! இருபக்கத்துப் போர் வீரரும், யுத்தம் ஒன்று நடக்கிறது. இராணுவ சட்டங்கள் உண்டு என்பதையே மறந்தனர். ஒவ்வொரு போர் வீரனும் கிடங்கினிலிருந்து அச்சமின்றி வெளியேறி, எதிர்பக்கம் கடந்து பகைவருடன் கைகுலுக்கிக் கட்டி அணைத்துத் தழுவி அன்பு பாராட்டினர். தங்களை அறியாமலேயே நத்தார் உணர்ச்சியும் மகிழ்ச்சியும் பரவிற்று. ஒவ்வொரு உளளத்திலும் அன்பு சுரந்தது. யுத்தமுனை சற்றுநேரம் அன்பு மயமாய் மிளிர்ந்தது. இதுவே நத்தார் செய்தியாகும். அதிவிரைவில் இரு பக்கத்து இராணுவத் தளகர்த்தரும் பழைய பயங்கர நிலைமையை நிலைநாட்டினர்.

இச்சம்பவத்தைக் குறித்து ராஜாஜி அவர்கள் கருத்து வெளியிடுகையில் "அன்று யுத்தப் போர் வீரர் எல்லோரும் ஒருமித்து இராணுவ தலைவரின் கட்டளையை மீறியிருந்தால், உலக சரித்திரத்திலே ஒரு மாபெரும் திருப்பம் ஏற்பட்டிருக்கும். சிறு துளிகள் சேர்ந்தது பெருமழை It is the totaiiy of the character of each individual that makes what we call national character. இதற்கு யேசுபக



வான் சிலுவையைச் சுமந்ததும் மகாத்மா காந்தி துப்பாக்கிக்கு இரையானதும் போன்ற தியாகம் தேவை.

இரண்டாவதாக, மனிதன் தேவனுக வாழ்வது எவ்வாறு என்பதாகும். ஆங்கில அறிஞர் டார்வின் தனது உயிரின்வளர்ச்சி (Theory of Ev lution) ஆராய்ச்சியில், உயிரற்றவர்களை அறவே விலக்கிவிட்டார். ஆனல் சைவசமய தத்துவ சாஸ்திரமோ - உயிரற்றவை, தாவரம், விலங்கினம், மனிதன் எல்லாவற்றிலுமே தெய்வீகம் செறிந்திருக்கிறது என்கின்றது. இவ் வளர்ச்சியை — முன்னைநாள் நிரந்தரக் காரியதரிசி திரு. பாலசிங்கம் அவர்கள் தனது (Sai Baba and the Hindu Theory of Evolution)- "சாய்பாபாவும் சைவ உயிரின வளர்ச்சியும்' என்ற நூலில் - ஒரு விளையாட்டு வீரனின் தாரப்பாய்ச்சலுக்கு ஒப்பிடுகிறார். அதாவது Running, Hop, Step and Jump - ஓடி, குதித்து, மிதித்து பாய்கிறது. அதாவது உயிரற்றவர்களிலிருந்து தாவரம் வரைக்கும் ஓடுவதையும், தாவரம், விலங்கினம், சாதாரண மனிதன் வரைக்கும் குதித்தலையும் மிதித்தலையும். மனிதனிலிருந்து தேவனுகுவதை பாய்ச்சலுக்கு ஒப்பிடுகிறார். மனிதன் தேவனுக மாறுதலுச்கு பகிரதப் பிரயத்தனம் தேவை. அத்துடன் அதிதீவிர நுணுக்க புத்தியும் (Intellect of high c nsent) சுயாதீனமும் (Free will) இன்றியமையாதன. சாதாரண புத்திக்கு அப்பால் நுண்ணிய புத்தி (super intellect) உண்டு என்பது அரவிந்தர் ஆராய்ச்சியின் முடிவு. மேலும் நவீன மேலைத்தேச நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானிகளும், மனிதனில் ஒரு நூதன நுண்ணிய அபார சக்தி உண்டுதான் என்று ஒத்துக் கொள்ளுகிறார்கள்.

வாழ்க்கையின் நோக்கம்; தெய்வீகத் தன்மை எய்தி கடவுளிடம் சேருவதே. ஆகவே, இப்புனித நாளில்யேசுநாதரின் போதனைகளை நாளாந்த வாழ்க்கையில் சாதனை செய்வதே நன்மைதரும். செயின்ற் பீற்றரை அந்தத் திவ்விய காட்சி கேட்டதுபோல, நாங்கள் ஒவ்வொருவரும் எங்களையே "எங்கே போகிறோம்?" என்று கேட்பது அவசியமாகும்.

"நல்ல மனச்சாட்சியே நித்திய நத்தாராகும்" என்றுர் பெஞ்சமின் பிறுங்கலின் என்ற அமெரிக்க அறிஞர். இதுவே கிறிஸ்தவ நற்சிந்தனையாகும்.

## நெடுந்தணல்

நெஞ்சம் உனக் கென்பர் நீயே துணையென்பர்
மஞ்சம் கிடைக்கு மெனின் பணி மொழிகள் கூறிடுவர்
வஞ்சம் மனத்திலே வரலாறுக் கொண்ட சிலர்
சஞ்சத் தனம் நிறைந்த கண்ணீர்த் துளிகள் இவர்

கொஞ்சும் கிளி என்பர் கோல மயில் என்பர்
தஞ்சும் வரை சுகங்கள் கிடைக்கும் வரை அணைப்பர்
மிஞ்சும் இளமையெலாம் செஞ்சி எடுத்திடுவர்
கொஞ்சி மகிழ்ந்திடுவர் உலாவித் திரிந்திடுவர்

வஞ்சிக் கொடியென்பர் வானமதி யென்பர்
கஞ்சிக் கலைய விடேன் கண்ணே உனையென்பர்
எஞ்சும் இளமையெலாம் எமக்கேதான் சொந்தம் என்பர்
பிஞ்சில் அவள் பழுக்க அஞ்சி நடந்திடுவர்

குஞ்சம் தலையசைய குல மகளாவ மென்று
தஞ்சம் அடைந்துவிட்ட தாயாகும் பெண்மயிலை
பஞ்சத்தில் விட்டிடுவர் பண் பற்றுவாழ்ந்திடுவர்
நெஞ்சம் இதை எண்ணி நெடுந்தண லாகுதிங்கே.

— செவ்வந்தி மகாலிங்கம்

## வீரரை . . .

(6ம் பக்கத் தொடர்ச்சி)

என நினைத்தார்கள். அவரும் வந்தார். வில்லை வளைத்தார். தேவர்கள் மகிழ்ச்சி அடைந்தார்கள். வில்லில் நாணேசையை எடுத்தார். அவருடைய நாணேசை அளவிலாத இடியேறுகள் வானமுகிலிடை மறைந்து நின்று ஒலிசெய்த தன்மைபோல மிகக் கொடூரமாக அமைந்தது. முன்பு மகிழ்ச்சியடைந்த தேவர்கள் இப்போ நடுங்கித் தளர்கிறார்கள்.

மழைவரவு கண்டு மகிழ்ந்து இடியோசையால் தளர்ந்தவர்களை இங்கே தளரும் தேவர்களுக்கு உவமையாக்கிக் காட்டப்படுகிறது.

"நாண்கொண்டிடும்
ஒலிகேட்டலும் நடுங்கா
வெரு வுற்றார்
பூண்கொண்டிடு சிலைவாங்க
லும் மகிழ்வுற்றிடு புலவோர்
சேண்கொண்டிடும் முகில்
வேண்டினர் அதுவந்திடச்
சிறந்தே
மாண் கொண்டதன் உரு
முச்சல மயங்கித் தளர்
வதுபோல்"

சூரனுடைய மூத்த புதல்வன் பானுகோபன் யுத்தத்திற்கு வந்தான். இரண்டாயிரம் வெள்ளம் எனும் தொகையினையுடைய பூதவீரர்கள் யாவரும் அவனை வளைத்துக்கொண்டார்கள். தனியாக அவனும் தன் வில்லை வளைத்து கோபத்துடன் அளவற்ற அம்புகளை பூதவீரர் மேல் மழைபோல் பொழிகிறான். இதற்குச் சோதிடக் கலையாடு சம்பந்தப்பட்ட ஒரு சிறந்த உவமையை கச்சியப்பர் எடுத்துக்காட்டுகிறார். வெள்ளி என்னும் கிரகம் மழைக்குரியது. அதற்குரிய ஆட்சி வீடு துலாம். அதற்குரிய நட்சத்திரங்களில் சோதி சிறப்புடையது. கிரகநிலைப்படி சோதிநட்சத்திரத்தில் வெள்ளி வருகின்ற காலத்தில் கார்கொண்ட மேகங்கள் பூமியில் அதிக மழையைப் பொழியும். பானுகோபனது அம்புமழை சோதியில் வெள்ளி நிற்கும் போது முகில்கள் பெய்யும் மழையோடு ஒப்பிட்டுக் காட்டப்படுகிறது.

"மேதக்க தன்கைச் சிலை
வாங்கி விளங்கும் வெள்ளி
சோதிக் கிறையாயுறும்
எல்லையிற் சூல்கொள் மேகம்
மூதக்க பாரிற் சொரிந்
தென்ன முனிந்து நோம்
பூதப்படை மேற் சரமாரி
பொழிதலுற்றான்"

நம்பிக்கையான நவநாகரிக தங்க, வைர
நகைகள் வேண்டுமா?
பொ. அம்பலவாணர்
தங்க, வைர நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
போன்; 7199. தந்தி: வைரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர் எண்ணம்

# "உங்கள் மகன் வந்திருக்கிறேன்"

'கண்டோஸ்'

அந்தப் பனியின் குளிர் தாங்காது ஊரே உறங்கிய வேளையில் குமார் மட்டும் உறக்கம் வராது படுக்கையில் புரண்டபடி கிடந்தான். நினைவுச்சுமைகள் அவனை உறங்க விட்டால் தானே. அவன் உறங்க முடியும். மெல்ல எழும்பி கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தான். குளிரில் உடல் வெடவெடத்தது. மீண்டும் அறையிலுள் சென்று படுத்துக் கொண்டான், உடல் தூங்கினாலும் மனம்தான் தூங்குமா அல்லது நினைவுகள்தான் தூங்குமா? நினைக்க மறுத்தும் நினைவுகள் பள்ளிப்பருவ வாழ்க்கைக்கே ஓடிச் சென்றன.

சின்ன வகுப்புகளிலே குமார் தான் வகுப்பில் முதல் மாணவன். ஆறும் வகுப்பு வரை இது தொடர்ந்தது. பின்பு தான் அவனது நடைமுறையிலேயே மாற்றங்கள் ஏற்பட்டன. அதுவரையில் விளையாட்டில் பொழுது போக்கியவர்கள் விழித்துக் கொள்ள, இவன் கதைகளிலும் விளையாட்டிலும் ஈடுபட்டுப் போனான். ஆரம்பத்தில் வீட்டுக்கு வந்தவுடன் தன்னுடைய பாடங்களை அன்றன்றே படிப்பவன் மாறியேபோனான். பரீட்சைக்கு இரண்டு நாளைக்கு முன்பிருந்து படிக்கத் தொடங்கினால் போதும் என்ற ஓர் எண்ணம் மனதில் எழுந்து நிலைத்தும் போயிற்று. க. பொ. த. (சாதாரண) தரத்திற்கு வந்த பின்பும், தாய் கமலாவின் கண்டிப்புக்களுக்குக் காது கொடுக்காமல் விளையாட்டுக்களில் மூழ்கிப் போனான். ஆனாலும், பரீட்சைக்கு ஒரு கிழமை இருக்கும் போதுதான் படிக்கத் தொடங்கியவன் பரீட்சையில் வெற்றியைச் சந்தித்தான். இதை வைத்து அவன் எல்லாவற்றையுமே தப்புக்கணக்குப் போட்டு விட்டான். சாதாரண தரத்திற்குப் படித்தது போலவே உயர்தர வகுப்பிலும் படித்தால் போதும் என்று நம்பியவன் இருமுறை மூன்று தரமும் தோல்விகளைச் சந்தித்தான்.

வீட்டிற்கு முதல் ஆண்பிள்ளை அவன் தொடர்ந்து ஒரு சகோதரியும், ஐந்து தம்பிகளும் இருக்கிறார்கள்.

"முதற்கோணல் முற்றும் கோணல்" என்ற பழமொழியில் அதிக நம்பிக்கையுடையவர் அவன் தந்தை. மூத்த புதல்வன் குமார் கல்வி கற்று ஒரு டாக்டராக வந்தால் அவனை முன்மாதிரியாகக் கொண்டு குடும்பத்தில் மற்றைய பிள்ளைகளும் கல்வியில் தேறி பெரிய பெரிய உத்தியோகத்தில் அமர்வார்கள் என்றெல்லாம் எண்ணினார். அந்த அப்புத் தந்தை. அரசாங்க லிகிதராகக் கடமை புரியும் அவர் தனது மகன் குமாரின் எந்தத் தேவைகளையும் நிறைவேற்றுவதில் ஒரு போதும் பின் நிற்பதில்லை.

அவரது ஆசைக் கற்பனைகள் இடிந்து விழுந்து தரைமட்டம் ஆனபோது அவரால் அதைத் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. அன்றிலிருந்து ஓட்டினுள் இருக்கும் ஆமை போல தனக்குள்ளேயே அடங்கிப் போனார். ஒருவருடனும் அதிகம் பேசுவதில்லை. சம்பளம் எடுத்தவுடன் அதனை மனைவியிடம் கொடுத்து விடுவார். [illegible] வீட்டின் முன் விறாந்தையிலுள்ள சாய்மனைக் கதிரை. இப்படித் தனக்குத் தானே தண்டனை விதித்துக்கொண்டார்.

குமாரால் கூடத்தான் தன் தோல்விகளை ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை. தன்னைத்தானே தேற்றிக்கொண்டு வரும்போதுதான் தந்தையின் மாற்றத்தைக் கண்டவன் தனக்குள்ளேயே இடிந்து போனான். [illegible] அடி தரும் வேதனையிலும் பார்க்க பல கோடி மடங்கு வேதனையை அப்பாவின் இந்த மௌனம் தருகின்றதே என்று எண்ணி எண்ணி தனக்குள்ளேயே மாய்ந்து போனான். குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் ஏன் அம்மா கூட "அப்பாவின் அந்த மாற்றத்திற்கு நீ தானே காரணம்" என்ற மாதிரிப் பார்த்தபோது அவன் சொல்லொணா வேதனை கொண்டான். அவன் மனட்சாட்சியே அவனைத் தாக்கியபோது தான் அவன் தனது தவறுகளை உணர்ந்து கொண்டான். காலங்கடந்த உணர்வுதான். ஆயினும் அந்த உணர்வு வாழ்க்கையில் தொடர்ந்து இம்மாதிரித் தவறுகள் இடம் பெறுவதைத் தடை செய்யுமல்லவா?

காலம் பொறுமை வாய்ந்ததா என்ன? அது தனது இயல்புக்கேற்ப ஓடிக் கொண்டேயிருந்தது. இரண்டு வருடங்கள் ஆகியும் குமாருக்கு ஒரு வேலையுமே கிடைக்கவில்லை. ஆனாலும் அவன் விண்ணப்பிக்காத வேலைகளோ இல்லை.

"தந்தையின் உழைப்பிலே வயிறு நிரப்பிக்கொண்டு வேலை வெட்டி இல்லாது திரியும் வெட்கம் மானமற்ற பிறவி" என்பதுபோல் அயலகத்திலுள்ளவர்கள் இழிவாய்ப் பார்க்கையிலே அவனால் ஒன்றுமே செய்யமுடிவதில்லை. அவ்வேளையிலெல்லாம் நாளை [illegible] வர்களினதும் பிள்ளைகள் வளர்ந்து இப்படி வேலை கிடையாது தவிக்கையில்தான், இவர்கள் தான் படும் கஷ்டங்களை உணர்ந்துகொள்வார்கள் என்று நினைத்துக்கொள்வான் [illegible]

உடனேயே "ஐயோ எனது நிலைமட்டும் ஒருவருக்கும் வேண்டாம்" என்றும் நினைத்துக்கொள்வான். ஆறுதலற்று வேதனைகளால் துவளும்போதெல்லாம் தங்கை சுபாவின் இனிய வார்த்தைகளால்தான் ஆறுதல் அடைவான்.

"அண்ணா, ஆண்டவன் சோதிக்கிறார் என்றால் அதன் அர்த்தம், எங்களை ஏதோ நல்ல காரியத்திற்குத் தயார் பண்ணுகிறார் என்பதுதான்" என்று எனது ஆசிரியை அடிக்கடி சொல்லுறவா. "நீ கவலைப்படாமல் இருந்துபார்; இன்றில்லாவிட்டிலும் நாளை உனக்கு ஒரு நல்ல வேலை கிடைத்து நாங்கள் இந்த ஊரிலேயே ராஜவாழ்க்கை வாழப் போகிறோம். அதை விட்டு, ஆண் மகனாகிய நீயே இப்படிக் கலங்கினால் எங்களால் என்னதான் செய்யமுடியும்."

"நாட்கள் நகர்ந்தன. தந்தை மகனின் நிலை கண்டு பொறுக்காமல்வாடிப்போனார். மகனோ தந்தையின் நிலைக்குத் தான்தானே காரணம் என்று கலங்கினான். தாயும், சகோதரர்களுமோ இருவரினதும் நிலை கண்டு பொறுக்காமல் கவலை கொண்டனர் மொத்தத்தில் இன்பம் இசைத்த அக்குடும்பத்தில் துன்பத்தின் அவலம்தான் கேட்டது. "இந்த நிலையை நீடிக்கவிடக்கூடாது நான் எதிரில் இருந்தால்தானே என்னைப் பற்றிய கவலைகளால் அப்பா பாதிப்படைவார். நான் இங்கிருந்தே போய்விட்டால்....." நினைத்ததைச் சாதித்தேவிட்டான் குமார். ஒரு சிறிய கடிதத்தை எழுதிவைத்து விட்டு, உடைகளையும், 200/- பணமும் எடுத்துக் கொண்டான். நாளை அப்பா கடிதத்தைப் பார்க்கும்போது என்ன நினைப்பார் என்று எண்ணினான்.

எனினும் வீட்டை விட்டுப் புறப்பட்டேவிட்டான்.

அன்புள்ள அப்பாவிற்கு,

நான் தற்கொலை செய்ய மாட்டேன் என்பதை முதலிலேயே கூறிக்கொள்கிறேன். அப்பா, நீங்கள் ஒருவேளை எனக்குத் தேவையான வசதிகளைச் செய்துதராது விட்டிருந்தால் நான் இவ்வளவு தூரம் எனது நிலையை எண்ணி வேதனைப்பட்டிருப்பேனோ தெரியவில்லை. ஆனால் நான் கேட்டபோதெல்லாம், கேட்டதையெல்லாம் வாங்கித்தந்து என்னை வளர்த்தீர்களே. என்னால் உங்கள் ஆசைகள் நிறைவேறமுடியவில்லையே என்றுதான் கவலைப்படுகிறேன். இன்னும் ஐந்து வருடங்களில் உங்கள் ஆசைப்படி, உங்கள் மகனை உங்கள் வீட்டிற்கு [illegible]வேன். எல்லோருக்கும் எனது வாழ்த்துக்களைக் கூறுங்கள். உங்களுக்காவது என்னை விட்டால் ஆறு பிள்ளைகள் இருக்கிறார்கள், பார்த்து மனம் ஆற. ஆனால் எனக்கு நீங்கள் ஒருத்தர் தானே அப்பா, எனவே கட்டாயம் உங்களிடம் வருவேன்.

இப்படிக்கு
அன்பு மகன்
குமார்.

குமார் வீட்டைவிட்டு வெளியேறி இரண்டு [illegible] பின், ரஷ்யாவில் சென்று படிப்பதற்கான புலமைப் பரிசில் அவனுக்குக் கிடைத்தது.

நண்பர்களின் உதவியுடன் குமார் ரஷ்யா செல்வதற்கான ஆயத்தங்களை முடித்தான்.

பயணமாகும் நாளும் நெருங்கியது. வீட்டிற்குச் செய்தி அனுப்புவதற்கு மனம் துடித்தாலும், தனது படிப்பை முடித்து ஒரு வேலையும் தேடிக் கொண்ட பின் தான் வீட்டுக்குச் செல்ல வேண்டும் என்ற பிடிவாதத்தில் தமது ஆசையை அடக்கிக்கொண்டான்.

காலம் கதியென விரைந்தது ரஷ்யாவில் ஐந்து வருடப் படிப்பை முடித்துக் கொண்டு மேலும் 10 மாதங்கள் வேலை செய்து கொஞ்சம் பணம் சேர்த்துக் கொண்டான். ஆனால் அவன் தனது தந்தைக்கு அன்று எழுதியபடி ஐந்து வருடங்களின் பின் வீடு செல்ல முடியவில்லை. மேலும் ஒரு வருடம் கழித்துத் தான் செல்ல முடியும் போலத் தோன்றியபோது அவன் கவலையடைந்தான். ஆயினும் ஒரு வருடமும் ஒருநிமிடம் போல் ஓடியது. தாயகம் திரும்பியவன் முதல் வேலையாக நண்பர்களிடம்பட்ட கடனையடைத்து விட்டு ஊரை அடைந்தான்.

"அப்பா இப்போது என்னைப் பார்த்ததும் எவ்வளவு மகிழ்ச்சி அடைவார்" என்று எண்ணியபடி வீட்டுக் கதவைத் தட்டினான். கதவு திறபட்டதும் ஆவலுடன் உள்ளே நுழைந்தவனின் கண்ணில் முதல் பட்டவள் சுபா.

"அண்ணா நீ... நீ..." தங்கையின் தடுமாற்றத்தை ரசித்தபடி "நான் நானேதான் அது சரி அப்பா அம்மா எங்கே சுபா? என்றவனின் மனமோ நிலை கொள்ளாமல் தவித்தது.

"அப்பா, உங்கள் மகன் வந்திருக்கின்றேன் அப்பா நீங்கள் ஆசைப்பட்டபடியே பொறியியலாளராக, உங்கள் கனவுகளையெல்லாம் நனவாக்கிக் கொண்டு வந்திருக்கிறேனப்பா, நீங்கள் இப்போது என்னைக் கண்டதும் அடையப் போகும் மகிழ்ச்சியைக் கண்டு பூரிக்க வந்திருக்கிறேனப்பா" என்றெல்லாம் எண்ணியபடியே அவன் கண்கள் அப்பாவைத் தேடின. அப்பாமட்டுமில்லாது அம்மாவும் அங்கில்லாததைக் கண்டவன் ஒரு விநாடி திகைத்துப்போனான்.

"ஓ என் மீதுள்ள கோபம் இன்னும் அடங்கவில்லையா?" என்று எண்ணியவன் தம்பி ரவியிடம் கேட்டான். "அப்பா அம்மா எங்கை ரவி" ரவி பதில் கூறாது சுபாவைப் பார்த்தான். சுபா உடனே தன்னைச் சுதாகரித்துக் கொண்டு "வா அண்ணா உள்ளே முதலில் போவோம் அங்கை பார் அம்மா நிற்கிறா" குசினியின் வாசற்கதவைச் சுட்டிக் காட்டினாள் சிபா. ஆவலுடன் திரும்பியவன்.

"இதென்ன அம்மா வெள்ளைப்புடவையுடன் அப்படியென்றால்....." அம்மா என்றபடி ஓடிச்சென்று தாயைக்கட்டிக் கொண்டு விம்மி விம்மி அழுதான். "அம்மா, அப்பா ஏனம்மா எனக்கு ஒன்று கூட ஒரு சொல்கூடக் கூறாமல் போய்விட்டார். என் மீது ஏனம்மா அப்பாவிற்கு இத்தனை கோபம்? அவரது ஆசைகளையெல்லாம் நிறைவேற்றி விட்டு அவரது மகனாக வந்து

(9-ம் பக்கம் பார்க்க)

## சீதனம் ஒழிப்பதற்கு

ஈன்றெடுத்த சீமானும்
பேரம் பேசத்தொடங்கினனே!
பல இலட்சம் தருவேன்
உன் மகனை ஈவிர் என,
வாசலில் வந்து நின்றனனே!
மிடியில் வாடிடும்
அன்னையும் ஏது செய்வாள்!
பெற்றகடனை அடைக்க,
இஃதுவே தருணமென,
மைந்தன் முகம்
நோக்கிட்டாள்!
அரை வயிறு தான் உண்டு
வளத்திட்ட அன்னையும்
பருவத்தின் எல்லையில்
தன்முகம் நோக்கும்
[illegible]
இவளிடம் இறைஞ்சி
நிற்கவே!
ஏது செய்வான் பாவி மகன்
தன்னையே ஈந்திட்டான்
சீர் வரிசை நோக்கியே!
சீதனப் பேயை
அவிழ்த்துவிடும் பூவையரே
இஃதெல்லாம் ஒழிக்க
வழி உரைப்பேன்
கேண்மின் காள்!
செல்வமகளிர் ஏழ்மை
மகனை
வாழ்வளித்தால் சீதனக்
கொடுமை
காற்றாகப் பறந்திடுமே!
வறுமையில் உழலும்
சீர் பெண்ணுக்கு,
செல்வமகன் வாழ்வளித்தால்
சீதனப் பேய் திக்கற்றுப்
போயிடுமே!
உங்கள் கையில் பலமிருக்க
ஆடவரை இகழாது
மடமையை விட்டொழிக்க
விரைந்திடுவீர்!
பெண்ணினமே!

—வி. எஸ். சுந்தரம்
யாழ். பல்தொழில் நுட்பக் கல்லூரி.


# பட்டப்படிப்புகள் கல்லூரி
## யாழ்ப்பாணம் | மட்டக்களப்பு.

புதிய (வெளிவாரி) மாணவர்களை அனுமதித்தல்—1981/82

இலங்கைப் பல்கலைக்கழகங்களின் கலைமாணி (B A) வர்த்தக மாணி (B Com), சட்டமாணி (LL B) புள்ளி விபரவியல் (B Sc) ஆகிய வெளிநிலைப் (External) பாடநெறிகளுக்கான தமிழ்மொழி மூல விரிவுரைகளுக்கு புதிய மாணவர்களை அனுமதிக்கும்பொருட்டு பின்வரும் தகைமைகளில் ஒன்றை உடைய மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன:

(1) க. பொ. த. உயர் பரீட்சையில் ஒரே அமர்வில் 4 பாடங்களில் சித்தி, அல்லது

(2) ஒரே அமர்வில் 3 பாடங்களிலும் இன்னொரு அமர்வில் ஒரு பாடமுமாக (இரு அமர்வுகளில்) 4 பாடங்களில் சித்தி, அல்லது

(3) தூய கணிதம், பிரயோக கணிதம் உட்பட ஒரே அமர்வில் 3 பாடங்களில் சித்தி, அல்லது

(4) 21 வயதிற்கு மேற்பட்டவர்களாயின் 3 பாடங்களில் சித்தி, அல்லது

(5) ஆசிரியர் பயிற்சி சான்றிதழ் அல்லது கணித சிறப்பு பயிற்சி ஆசிரியர் சான்றிதழ் அல்லது வர்த்தக சிறப்பு பயிற்சி ஆசிரியர் சான்றிதழ் உடையவர்கள் விண்ணப்பிக்கலாம்.

விரிவுரைகள் யாவும் தமிழ் மொழிமூலம் சனி, ஞாயிறு நாட்களில் மட்டக்களப்பிலும், யாழ்ப்பாணத்திலும் நடைபெறும். யாழ்ப்பாணத்தில் பயில விரும்பும் மாணவர்கள், "அதிபர், பட்டப்படிப்புகள் கல்லூரி, 173/9, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கும், மட்டக்களப்பில் பயில விரும்பும் மாணவர்கள், "அதிபர், பட்டப்படிப்புகள் கல்லூரி, 37 பிரதான வீதி, மட்டக்களப்பு" என்ற முகவரிக்கும் 9" X 4" அளவுடைய சுய முகவரியிடப்பட்ட 35 சத முத்திரை ஒட்டப்பட்ட கடிதவுறை அனுப்பி, இலவச விபரங்களையும், விண்ணப்பப்படிவங்களையும் பெறலாம். இக்கல்லூரியிலிருந்து பெறப்படும் விண்ணப்பப் படிவங்களிலேயே மாணவர்கள் விண்ணப்பிக்கவேண்டும். விண்ணப்ப முடிவு திகதி 1981-ம் ஆண்டு தை மாதம் 10-ம் திகதியாகும்.

THE COLLEGE OF DEGREE STUDIES

அதிபர்,
பட்டப்படிப்புகள் கல்லூரி,
15, சென் லேறன்ஸ் வீதி,
கொழும்பு-6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுகதை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

என்னால ஏலாது. எந்த எதிர்ப்பிலேயும் அவளைத்தான் நான் கலியாணம் செய்வன்......'' மதனின் பிடிவாதம் பூகம்பமாக வெடிக்கிறது.

''கண்ட சாதியளை வீட்டுக்க கூட்டிக் கொண்டு வாறதெண்டால இண்டையோடையே இந்த வீட்டுககும் உனக்கும் எந்தத் தொடர்பும் இல்லை......'' குமுறும் தந்தையைப் பார்த்து முறைக்கும் மகன். விளைவு;

'' தன்...... என்னை மன்னிச்சிடுங்க என்னைத்தயவு செய்து மறந்திடுங்க. நான்...... என்றும் போலவே ஒரு...... அனாதை...தான்! தயவு செய்து இந்த இடத்தை விட்டுப்போயிடுங்க! நாம மதத்தால...... ஜாதியால வேறுபட்டவங்க......நமக்கு நடுவே பெரிய சுவர்! போயிடுங்க......''! விம்மலும் வேதனையிம் கண்ணீருமலக்க அவள் பெட்டி படுக்கையுடன் உற்றவரை பெற்றவரை வெறுத்து வந்து நிற்கும் மதனைப்பார்த்து கதறினாள்.

''ம்...... அந்தப் பிரமாண்டமான ஜாதிச் சுவரை நம் அன்புக் கரங்களாலேயே தகர்த்தி நமக்கெண்டொரு வாழ்வை......!''

''வேண்டாம் பெற்றவங்களின் ஏச்சுக்கும் திட்டுகளுக்கும் முன்னால எந்தக் குடும்பமும் சந்தோஷமா வாழ முடியாது. உங்க படைப்புக்களில் தான் நான் வாழ்ந்து கொண்டிருக்கிறேனே'' இதுவே போதும் எனக்கு! தயவு பண்ணி என்ன மறந்திடுங்க...... நான் அனாதை

## உங்கள் . . .

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

நிற்கிறேனே என்னை ஒரு தரம் பார்க்கச் சொல்லம்மா. குமார் அழ, அம்மா அழ அனைவரும் அழுதனர்.

அவன் தன்னை ஒருவாறு திடப்படுத்திக் கொண்டதும் கூபா கூறினாள். ''அண்ணா அப்பா உனக்காகக் காத்திருந்தார். போன வருடம் நீ நிச்சயம் வருவாய் என்று எண்ணியிருந்தோம்' ஆனால் நீ வரவில்லை. நாங்கள் மிகவும் துடித்துப் போனோம். ஆனால் எங்களிலும் விட அப்பா தான் துவண்டு போய் விட்டார். நீ வராதபடியால் உனக்குத்தான் ஏதோ நேர்ந்து விட்டது என்று எண்ணி மனங்கலங்கிப் பேசினார். முடிவில் இதுவே அவருக்கு எமனாகிப் போய்விட்டது'' குமார் சூட்கேசைத் திறந்து அப்பாவுக்கென தான் வாங்கி வந்த பொருட்களையெல்லாம்எடுத்து கைகளில் வைத்துப் பார்த்தபடி மீண்டும் அழத் தொடங்கினான் ஓ அவனது சோகங்கள் மாறாத சோகங்களல்லவா? அந்த நினைவுகள் தூங்காத நினைவுகளல்லவா?

ஆண்டவனுடைய சந்நிதானத்திலே நான் ஒரு கண்ணீர்ப்பூ! அவன் பதிலுக்குக் காத்திராமலேயே அவள் அந்தக் கிராமத்தை விட்டு பாடசாலையை விட்டு...... அந்தக் கன்னியர் மடத்தை...... நோக்கி நடந்தாள். வாழ வைத்த நினைவுகள் வாட்டிவிட்ட சோர்வில் புரண்டு படுக்கிறாள் நிசா.

(யாவும் கற்பனை.)


SANTHI (JAFFNA) 10-30, 2-30, 4-45, 7-00 9-30

A GRAND X'MAS RELEASE!

JOHN TRAVOLTA ✭ KAREN GORNEY

SATURDAY NIGHT FEVER

A FAMILY ENTERTAINMENT

DANCE - MUSIC - SUSPENSE - THRILL

வின்ஸர் (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00, இரவு 9-30
எம் ஜி.ஆர்-ஜெயலலிதா-ஆனந்தன்
தனிப்பிறவி (புதிய பிரதி)

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
50-வது நாளை நோக்கி
தினசரி 10-30, 2-30, 6-00 & 9-30
ஜெய்சங்கர், சீமா, கே. ஆர். விஜயா
ஒரேவானம் ஒரேபூமி
(வண்ணக்கலர்)

ராஜா (யாழ் நகர்) தினசரி 10-30, 2-15, 6-00 & 9-30
இமயம் முதல் குமரிவரையுள்ள பல நூற்றுக் கணக்கான புனித ஸ்தலங்களை உள்ளடக்கியதும், தனக்கேற்பட்ட துன்பங்களை தூசியென எண்ணி தான்கொண்ட தெய்வபக்தியே மேல் என நினைத்த ஒரு பக்தனின் கதைதான் 'சுப்ரபாதம்.'
என்றுமில்லாதவாறு காட்சிக்கு காட்சி ஜனத்திரள் நிறைந்து காட்சியளிக்கிறது.
ஜெய்கணேஷ், சுந்தரராஜன், நம்பியார், கே. ஆர். விஜயா, லதா, ஸ்ரீபிரியா, முத்துராமன்
சுப்ரபாதம்
(ஈஸ்ட்மன் கலர்)


## நாவலர்

(5ம் பக்கத் தொடர்ச்சி)

சுகளிடம் இருக்கிறது.

1958ம் ஆண்டில் அமெரிக்காவில் மூன்றுமாத காலம் சுற்றுப்பிரயாணம்செய்ய வாய்ப்புகிடைத்தபோது அமெரிக்காவிலேயே மிக உயர்ந்தகோபுரத்தில் ஏறி நின்று ''தமிழில் உயர்க்கூவி'' ''உலகமெலாம் தமிழோசை பரப்பி'' மகிழ்ந்தவர் திரு செட்டியார்,

பத்திரிகைத்துறையில் நிறைந்த அனுபவம் பெற்ற திரு. செட்டியார் 'சுதந்திரன்' பத்திரிகையில் பணியாற்றும்போது திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் பாராளுமன்றத்துக்கு எப்படியான உடை அணிந்து செல்ல வேண்டுமென்று புத்திகூறியதையும் நினைவுபடுத்திக்கொள்கிறார்.

'சுதந்திரன்' பத்திரிகை தினசரியாக வெளிவந்துகொண்டிருந்த சமயம் அங்கு ஊழியர் வேலைநிறுத்தம் ஒன்று ஏற்பட்டது அச்சமயம் திரு. செட்டியார் பத்திரிகை ஒருநாளாவது தடைப்படாமல் வெளிவந்துவிடவேண்டுமென்பதற்காக தனியொருவனாக நின்று கடுமையாக உழைத்து வந்தார். அப்போது ஒருநாள் 'சுதந்திரன்' அலுவலகத்துக்கு தமது மனைவியாருடன் 'சுடு தண்ணீர்ப்போத்தலில் தேநீருடன் வந்த திரு. எஸ் ஜே வி செல்வநாயகம், ''இரண்டொருநாள் பத்திரிகை வெளிவாராமல் போனாலும் பரவாயில்லை, உங்கள் உடல்நலனைக் கவனித்துக்கொள்வது முக்கியம்'' என்று கூறியதை இன்றும் அவரின் மனிதாபிமானப் பண்புக்கு எடுத்துக்காட்டாகச் சுட்டிக்காட்டுகிறார்;

தமிழ்நாட்டுக்கே சென்று போகாசனக் கலையை அன்று போதித்தவர் இன்று அமெரிக்காவில் போகாசனக்கலையைப் போதிப்பதற்கு நல்ல வாய்ப்பிருந்தும் ஏன் அதில் ஈடுபடவில்லை யென்பதற்கு அவர் கூறும் காரணம் ''எதையும் போதிப்பதற்கு உனக்குத் தகுதி வந்துவிட்டதென்று ஆண்டவன் உனக்கு உணர்த்தும்வரை நீ எதையும் செய்ய முன்வரக் கூடாது'' என்று ஸ்ரீ இராமகிருஷ்ணபரமஹம்சர் கூறியதை மறந்துவிடக்கூடாது என்பதுதான்.

பத்திரிகைத் துறையிலும் அமெரிக்கத் தூதரகப் பணியிலும் சுறுசுறுப்பாக இயங்கிய திரு.செட்டியாரால் இப்போது சும்மா இருக்க எப்படி முடிகிறது.

இதற்கு அவர் சொன்ன பதில் ''நான் இனி என்ன செய்யவேண்டும், எந்தத் துறையில் ஈடுபடவேண்டும் என்பதெல்லாம் நானாகத் தீர்மானிக்கக்கூடியதல்ல. ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே, கூத்தப் பிரானின் எண்ணம் எப்படியிருக்கிறதோ! அதைப்பொறுத்தே எனது எதிர்காலமும் அமையும்.''

சந்திப்பு:எஸ். எம். ஜீ.


ஹரன் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
நாகேஸ்வரராவ்-சாவித்திரி
தேவதாஸ்

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-15, 9-30
சனி ஞாயிறு 2-15
ஆடிப்பெருக்கு

வெஸ்லி
(மாவிட்டபுரம்)
தினசரி 6-15, 9-30,
சனி-ஞாயிறு 2-30
வானடக்காற்று


## கேகாலை மாவட்டம்:

# ஏழுதமிழ்ப்பாடசாலைகளிலும் தமிழ் அதிபர்கள் நியமனம்

(மாவிட்டபுரம்)

கேகாலை மாவட்டத்தில் முஸ்லிம் அதிபர்களைக்கொண்டு இயங்கும் ஏழு தமிழ்ப் பாடசாலைகளுக்கும் எதிர்வரும் ஜனவரி மாதத்தில் தமிழ் அதிபர்கள் நியமிக்கப்படுவார்கள் என்று கல்விச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் திரு எ. எச். எச் ஆரியரத்ன இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப்பொதுச்செயலாளர்திரு. த மகாசிவத்திடம் உறுதியளித்துள்ளார்.

கேகாலை கல்வி மாவட்டத்தைச்சேர்ந்த டெகியோனந் தமிழ் மகாவித்தியாலயம், உந்துகொடை தமிழ் மகாவித்தியாலயம், பினிடெனிய ஓயா தமிழ் வித்தியாலயம் றூறிதமிழ் வித்தியாலயம், மதினியா அரசினர் தமிழ்வித்தியாலயம், அம்பன்பிற்றிய தமிழ்வித்தியாலயம், றூவான்வெல அரசினர் தமிழ் வித்தியாலயம் ஆகிய 7 தமிழ்ப்பாடசாலைகள் முஸ்லிம் அதிபர்களைக்கொண்டு இயங்குவது குறித்து கடந்த ஒருவருடமாக இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் குரல்கொடுத்து இங்கு தமிழ் அதிபர்களை நியமிக்குமாறுகோரி வந்தது.

# மன்னார் பஸ் டிப்போவில். ஒளிவிழா

(மன்னார்

வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் மன்னார் சாலையின் ஆதரவில் மாபெரும் ஒளி விழா இன்று ஞாயிற்றுக் கிழமை மன்னார் டேருந்து நிலையத்தில் நடைபெறவிருக்கிறது.

மன்னார் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. எஸ் சூசைதாசன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் நானாட்டான் மகாவித்தியாலய ஆசிரியை வரவேற்புக் கீதம் பாடுவார். மன்னார் சாலை அத்தியட்சகர் திரு ஏ. சண்முகானந்தன் வரவேற்புரை நிகழ்த்துவார்.

இவ்விழாவில் பிரதம விருந்தினர்களாக மன்னார் மறைமாவட்ட முதல்வர் வணக்கத்துக்குரிய பயஸ் அடிகளாரும், மன்னார் அரசாங்க அதிபர் திரு. கமிலஸ் பெர்னாண்டோவும், வட, தென் பிரதேச முகாமையாளர் திரு நா. தியாகராசாவும் கலந்துகொள்வர்

நானாட்டான் பங்குக் குரு வணக்கத்துக்குரிய கிறிஸ்டியன் வாஸ் அடிகளாரும், நவாலி புனித பீற்றர் வித்தியாலய அதிபர் திரு. ஜி. பி. அல்பிரட்டும் சிறப்புரை நிகழ்த்துவார்கள்.

வட, தென் பிரதேச முகாமையாளர் திரு. நா. தியாகராசா ஒளிவிழா மலரை வெளியிட்டு வைப்பார். இவ்விழாவில் கலை நிகழ்ச்சிகளும், விநோதக்குரலிசையும், நடனம், நாடக நிகழ்ச்சிகளும், வில்லிசை, கதம்ப நிகழ்ச்சிகளும், சமூக நாடகமும், மெல்லிசையும் இடம்பெறும்.

அமைப்பாளர் திரு. து. உமாபதிசிவம் இவ்விழாவுக்கு அனுப்பி வைத்துள்ள செய்தியில் குறிப்பிட்டுள்ளதாவது:

### வாழ்த்துச் செய்தி

''ஒற்றுமையும், ஐக்கியமுமே சகோதரத்துவத்தையும் அன்பையும் பெருகச் செய்யும் ஊற்றுக்களாகும். 'நான் உங்கள் மேல் அன்பு செலுத்துவது போல நீங்களும் ஒருவர் மேல் ஒருவர் அன்பு செலுத்துங்கள்' என்பதே யேசு பெருமானின் வேண்டுகோளாகும். எனவே மக்களோடுமக்களாக இணைந்து சேவையாற்றும் நாம் அன்புடன் பணி செய்வதே நமது நோக்கம். இதனையே எமது தாரக மந்திரமாகக் கொண்டு கடமையாற்ற இந்த ஒளிவிழா நாளில் உறுதி பூணுவோம்.''

அரியா-அ

## உடுவில் கொலை:

# சந்தேக நபர்கள் இருவர் பிணையில் அனுமதி

(மாவிட்டபுரம்)

உடுவில் கொலை குறித்து றிமாண்டிலிருந்த நான்கு சந்தேக நபர்களில் இருவர் உயர் நீதிமன்ற அனுமதியின் பேரில் 2500ரூபா உறுதிப் பிணையில் செல்லஅனுமதிக்கப்பட்டனர்

உடுவிலைச் சேர்ந்த இராமலிங்கம் சின்னத்தம்பி என்பவரைக் கத்தியால்வெட்டியும், கோடரியால் கொத்தியும், பொல்லால் அடித்தும் கொலை செய்ததாக அவ்விடத்தைச் சேர்ந்த பெருமாள் அமரசிங்கம், பெருமாள் குருதலசிங்கம், சின்னையா மாடசாமி. நேசன் பரமு ஆகியோர் சந்தேகத்தினபேரில்கைதாகிறிமாண்டில் வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்களைப் பிணையில் விடுமாறு கோரும் விண்ணப்பத்தை சட்டத்தரணி பி. தவராசா உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பித்தபோது உயர்நீதிமன்றம் 3ம், 4ம் சந்தேக நபர்களைமட்டுமே பிணையில் செல்ல அனுமதிவழங்கியது. இதனைத் தொடர்ந்து இந்நபர்கள் மீண்டும் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டபோது 3, 4ம் சந்தேகநபர்களை 2500 ரூபா உறுதிப் பிணையில் செல்ல அனுமதித்த நீதிபதி திரு சி ஆர். இராஜசிங்கம் 1ம், 2ம் சந்தேகநபர்களை தொடர்ந்து றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணிகள் ஆர். ஜே. செல்வரத்தினம் திருமதி எம். பீரிஸ் ஆகியோர்ஆஜராகினர்.


லிடோ
(யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30,
6-00 ,9-30
எம்.ஜி.ஆர்.- சாவித்திரி
வேட்டைக்காரன்

வெலிங்டன்
(யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
நினைத்தாலே இனிக்கும்


(மன்னார்)

மன்னார் பகுதியில் வாகனங்களில் பிரயாணம் செய்வோருக்கு ரஷ்யத் தாரகைகள் கண்கொள்ளாக் காட்சியளித்து வருகிறது.

மன்னார் பகுதி தரவைகளில் சஞ்சரித்துவரும் ரஷ்யத் தாரகைகள் ஜனவரி மாதம் வரை இப்பகுதியில் சஞ்சரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது

போயா தினத்தையொட்டி இன்று சினிமாக் காட்சிகளில்லை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மலிவு விலை விபரம்

| | | |
|---|---|---|
| பப்ளின் | 9/50 | மீற்றர் |
| சீத்தை | 1?/50 | ,, |
| பொலியஸ்டர் | 13/50 | ,, |
| பிளாஸ்டிக் | 6/50 | ,, |
| டவுஸர் லென்த் | 33/?5 | ,, |
| காலமேஸ் | 5/50 | ,, |
| பெனியன் | 5/25 | ,, |

31-12-80 வரைக்கும்

சீக்கோ டிரேடர்ஸ்

43, நவீனசந்தை, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 684


ஆயுர்வேதக் கல்லூரியின்

# நிர்வாகத்தை நடத்த மூவர் ஆணைக்குழு

(யாழ்ப்பாணம்)

லங்கா ஆயுர்வேத வைத்தியக்கல்லூரியின் நிர்வாகத்தை மூன்றுபேர் கொண்ட ஆணைக்குழுவொன்றிடம் யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம் ஒப்படைத்துள்ளது.

நீதிமன்றத்தில் இக்கல்லூரி நிர்வாகம் குறித்து வழக்கு ஒன்று நடைபெறுவதால் இக்கல்லூரியில் கல்வி பயிலும் மாணவர்களின் நலன் கருதி மாவட்ட நீதபதி இவ்விடைக்கால ஏற்பாட்டைச் செய்துள்ளார்.

இவ்வாணைக் குழுவுக்குச் சட்டத்தரணிகள் டபிள்யு. எஸ். செந்தில்நாதன் தலைவராக இருப்பார். எஸ். லோகேஸ்வரன், ஆர். கமலநாதன் ஆகியோர் ஏனைய உறுப்பினர்களாவர்.


கல்வனைஸ்ட் நெளிவுள்ள கூரைத்தகடுகள்

35 U S G & 32 U S G

நீளம் 6 அடி முதல் 10 அடிவரை

சி ஐ சி பெயின்ற் வகைகள்

கதிர் ஹாட்வெயர்ஸ்

(TILLY'S GROUP)

111-2, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். போன்: 7130


# ரூ. 35,000 கொள்ளை; எதிரி குற்றத்தைஒப்புக்கொண்டார்

(பண்டத்தரிப்பு)

நவாலி குருக்கள் மடத்தடியிலுள்ள வீடொன்றில் பட்டப்பகலில் ஜன்னலைப் பிரித்து உள்ளே இறங்கி 35 ஆயிரத்து 225 ரூபா பெறுமதிமிக்க நகைகள், புடவைகள் ஆகியவற்றைக் கொள்ளையடித்ததாகக் குற்றம்சாட்டி ஆனைக்கோட்டைப் பொலிசாரினால் தொடரப்பட்ட வழக்கில், முக்கிய சந்தேக நபர்களில் ஒருவரான அம்பலம் திருச்செல்வம் என்பவர் தமது குற்றத்தை ஏற்றுக்கொண்டார்.

இதனைத்தொடர்ந்து யாழ். நீதிமன்ற நீதிபதி திரு. ரி. ஜோகநாதன் அவரை எதிர்வரும் ஜனவரி மாதம் 2-ம் திகதிவரை றிமாண்டில் வைக்க உத்தரவிட்டு, அன்றையதினம் தீர்ப்புவழங்குவதாகத் தெரிவித்தார்.

நவாலி குருக்கள்மடத்தடியிலுள்ள திருமதி இந்திரா சிவபாதசுந்தரம் என்பவரின் வீட்டில, வீட்டிலிருந்தவர்கள் நல்லூர்க் கந்தசுவாமி கோவில் ரதோற்சவத்திற்குச் சென்றிருந்த சமயத்தில் ஜன்னலைப் பிரித்து உட்புகுந்து 5 ஆயிரத்து 225 ரூபா பெறுமதியான நகைகள், புடவைகள் உட்படப் பல பொருட்களைக் கொள்ளையடித்ததாக ஆனைக்கோட்டைப் பொலிஸ் சார்ஜன்ட் திரு. தில்லன்துரையினால் கைதுசெய்யப்பட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு பெண்கள் உட்பட நால்வர் மீது இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

சுப்பர் அம்பலம், அம்பலம் சோதிப்பிள்ளை, பாக்கியம் ஆகிய மூவரும் றிமாண்டில் வைக்கப்பட்டு கடந்த தவணைகளில் விடுதலை செய்யப்பட்டனர். றிமாண்டில் வைக்கப்பட்டிருந்த அம்பலம் திருச்செல்வம் மீண்டும் யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டபோது அவர் தம்து குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து நீதிபதி அவரை தொடர்ந்து ஜனவரி மாதம் 2-ம் திகதி வரை விளக்க மறியலில் வைக்க உத்தரவிட்டு அன்றைய தினம் தீர்ப்பு வழங்குவதாக தெரிவித்தார். நீதிமன்றத்தில் பொலிஸ் தரப்பில் ஆனைக்கோட்டை பொலிஸ் சார்ஜன்ட் திரு. தில்லன்துரை ஆஜரானர்.

## திறந்தவெளி அரங்கில்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சத்தோலிக்க இளைஞர்கள் இணைந்து கொண்டாடும் கிறிஸ்து பிறப்பு விழா இன்று மாலை யாழ். திறந்தவெளி அரங்கில் நடைபெறும். கிறிஸ்மஸ் செய்தியை யாழ். ஆயர் பேரருட் திரு. வ. தியோகுபிள்ளை வழங்குவார்.


"யூனியன்"

# நெல் உலர்த்தும் இயந்திரம்

அவித்த நெல்லை உலர்த்துவதற்கு பிரத்தியேகமாகச் செய்யப்பட்டது. நெல்லை திரும்பத் திரும்ப இவ்வியந்திரத்னுள் செலுத்தி, சாம்பல் புகையற்ற இளப்பமா காற்றால் நீர்த்தன்மை அகற்றப்படுகின்றது. இதற்கென உமியில் எரியும இணைத்து அமைக்கப்பட்ட அடுப்பு மூலம் வெப்பக் காற்று பெறப்படுகின்றது.

இது இலகுவாக இயங்கக்கூடியதும், 4 தொன் (200 புசல்) நெல்லை 5 மணித்தியாலங்களில் உலரவைக்கும் தன்மையுடையது.

## விசேஷ அம்சங்கள்

(1) நெல் குத்தும் விகிதம் இரண்டு மடங்காக்குதல்.

(2) அரிசியின் சுவை குன்றுதிருத்தல்.

(3) விசேஷமாய்ப் பொருத்தப்பட்ட பீலிகள் மூலம் பெறப்படும் சம காயும் தன்மை.

(4) இணைத்துப் பொருத்தப்பட்ட எலிவேட்டர் நெல்லைத் துரிதமாக ஏற்றவும் இறக்கவும் துணை புரிதல.

(5) எலிவேட்டரில் பொருத்தப்பட்டிருக்கும் வழிமாற்றி காய்ந்த நெல்லை நேராக குழாய் மூலம் நெல் குத்தும் இயந்திரத்திற்கு கொண்டுசெல்லும் தன்மை.

(6 உமியை காற்றுடன் கலந்து அடுப்பினுள் கடத்தும் சாற்று.

(7) உயரம் 34 அடி. உமியில் இயங்கும் வெப்பகுலையுடன் இவை அமைய தேவைப்படும் நிலப்பரப்பு 10' X 20'.

அநேகரின் வேண்டுகோளுக்கிணங்கி 1981 ஜனவரி மாதம் முதல் இரும்பு புனைவு வேலைகள் (FABRICATION) பாரம் எடுக்கப்படும்.

Estd 1922

# சாமுவேல் சன்ஸ் அன் கம்பனி லிமிட்டட்

206, 208, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 462.


## சங்கரத்தையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துடன் துப்பாக்கியால் சுட்டுக் காரைச் சேதப்படுத்திவிட்டு தபால் நிலையத்தில் கடமையிலீடுபட்டிருந்த நால்வரையும், தபால் நிலையத்திற்கு வந்திருந்த பொது மக்களையும் பயமுறுத்திவிட்டு அங்கிருந்த நாலு சைக்கிள்களை எடுத்துக் கொண்டு தப்பியோடினர்.

சங்கானைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. பிரேமதாசா தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டி ஒன்று கொள்ளையரால் வட்டுக்கோட்டை தபால் நிலையத்திலிருந்து எடுத்துச் சென்றதாகக் கருதப்படும் சைக்கிள் ஒன்றை சங்கரத்தையில் கண்டெடுத்துள்ளனர்.

சைக்கிள் பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு அதிலுள்ள கைவிரல் அடையாளங்கள் படம் பிடிக்கப்பட்டன.

பணம் கொண்டு வரப்பட்ட 'மொறிஸ் மைனர்' காரிலிருந்தும் கைவிரலடையாளங்கள் படம்பிடிக்கப்பட்டன.

கொள்ளையின்போது கொள்ளையர்களால் சுடப்பட்டதாகக் கூறப்படும் வெற்றுத் துப்பாக்கிக் குண்டுகளையும் பொலிசார் ஸ்தலத்திலிருந்து கண்டெடுத்துள்ளனர்.

கொள்ளையர்களால் கொள்ளையின்போது பாவிக்கப்பட்ட துப்பாக்கி, 75 யார் தூரத்திற்கு மட்டுமே சுடமுடியுமெனக் கண்டெடுக்கப்பட்ட வெற்றுத் துப்பாக்கிக் குண்டிலிருந்து பொலிசார் கண்டுபிடித்துள்ளதாகத் தெரிகிறது.

கொள்ளையடிக்கப்பட்ட பணம் பொலிஸ் பாதுகாப்பின்றி எடுத்துச் செல்லப்பட்டதற்கான காரணம் குறித்தும் பொலிசார் தீவிரமாக விசாரணை செய்துவருகின்றனர். (கொ-இ)

## இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். வாலிபர் கழக பொதுக்கூட்டம் இன்று மாலை வண்ணை வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது இக்கூட்டத்தில், பேராசிரியர் கலாநிதி டபிள்யு எல். ஜெயசிங்கம் சிறப்புரையாற்றுவார்.

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை நாச்சிமார் கோவிலில் இன்று காலை 6 மணிக்கு 'உள்ளொளி பெருக்கும் திருவாசகம்' என்னும் பொருள் பற்றி திரு. ஈழவேந்தன் சொற்பொழிவாற்றுவார்.

கொழும்புத்துறை மேற்கு பிள்ளையார் கோவிலில் இன்றிரவு 'திருவாசகத்தில் திருவெம்பாவை' என்னும் பொருள் பற்றி திரு. நடராசா உரையாற்றுவார். (கு)

## சிவன்கோவிலில்

(யாழ்ப்பாணம்)

வண்ணை ஸ்ரீவாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரன் ஆலயத்தில் நாளை அதிகாலை நடேசர் அபிஷேகம் நடைபெறும். அதிகாலை 3-00 மணிக்கு நவோத்திர சங்காபிசேஷமும், தரிசனமும்: வசந்த மண்டபப் பூஜையைத் தொடர்ந்து நடேசர் வீதிவலம் வருதலும், 9-00 மணிக்கு ஊடலும், தீர்த்த உற்சவமும் நடைபெறும். (கு)

## சமூகவிரோத

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் ஜனதிபதி வலியுறுத்தினர்.

நாட்டு மக்களுக்கு தாம் கொடுத்துள்ள வாக்குறுதியை நிறைவேற்றும் விதமாகவே தாம் இத்த எச்சரிக்கையை விடுப்பதாகவும் ஜனாதிபதி கூறினர்.


## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 9 ஸ்ரீ தொடர் இலக்க 'பஜாஜ்' ஸ்கூட்டர் விற்பனைக்குண்டு 10, கண்டி வீதி, யாழ்ப்பாணம். 7713

யாழ். இந்துக் கல்லூரிக்கும், யாழ் இந்து மகளிர் கல்லூரிக்கும் இடையில் கஸ்தூரியார் வீதியில் நல்ல தண்ணீர்க் கிணற்றுடன் இரண்டு பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு. சிவகுமார் 539 A கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 7712

## பயிற்சி

றேடியோ-ரெலிவிசன், ஏயர் கொண்டிசனிங் மூன்று மாத டிப்ளோமா பயிற்சி, சிறந்த செய்முறைப் பயிற்சிகளுடன் சனி, ஞாயிறு வகுப்புகள் ஆரம்பம் 27-12-80. அனைவரும் சேரலாம்.. நாஷனல் அக்கடமி, மொம்சாக சட்டிடம், ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். 7684

O.K TRAVEL SERVICE

# ஒ.கே ரவல் சேவிஸ்

நடாத்தும்

யாழ் மாநகரசபைக்கு உட்பட்ட மாணவருக்கான பாடசாலை சென்றுவரும் சேவை. ஒரு பிள்ளைக்கு வீட்டில் இருந்து பாடசாலைக்குச் செல்லும் தூரத்தைப் பொறுத்துக் கட்டணமாக ரூபா 50 தொடக்கம் ரூபா 75க்குள் அறவிடப்படும்.

விபரங்களுக்கு:

கிளைக் காரியாலயம்

ஒ.கே ரவல் சேவிஸ்

70, மானிப்பாய் வீதி (திசா ஸ்ரோர்ஸ்), யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 648

விண்ணப்பப் படிவங்களை எமது ஸ்தாபனத்திலேயே பெற்றுக்கொள்ளலாம். 7699


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், ஸ்ரான்லி மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் டிசம்பர் 21-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News paper at General Post Office Sri Lanka. under No: GB 8948/73. The Eelanaadu P. B. No: 49, TeleGrams: Eelanaadu, Phone: 389.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org